# உதயன்

சுடர் : 36 | கதிர் : 127 | வெள்ளிக்கிழமை | பங்குனி 20 ஆம் நாள் 02 ஏப்ரல் 2021 | வள்ளுவர் ஆண்டு 2051 | பக்கங்கள்: 2 | விலை : ரூ.3 | 0000 | 93 1111


## தேவாலயத்தில் நடமாடிய இளைஞர் கைது

வவுனியா, ஏப்.2
வவுனியா, இரண்டாம் குறுக்குத் தெருவில் உள்ள கிறிஸ்தவ தேவாலயமொன்றில் நடமாடிய முஸ்லிம் இளைஞ 19 >

## மயங்கி வீழ்ந்தவர்கள் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப்.2
திடீரென மயங்கி வீழ்ந்த இரு முதியவர்கள் உயிரிழந்துள்ளனர். நேற்று இரவு 10 மணியளவில் கைதடி, நுணாவிலைச் சேர்ந்த முதியவர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள் 19 >

தமிழினத்தின் குரலாக ஒலித்த

## மன்னார் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் மறைவு





யாழ்ப்பாணம், ஏப்.2
மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை இறைபதமடைந்தார். யாழ்ப்பாணம் திருக்குடும்ப கன்னியர்மடம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த அவர், தமது 81ஆவது வயதில் நேற்று வியாழக்கிழமை 19 >

## மரியசேவியர் அடிகள் நேற்றுக் காலமானார்



யாழ்ப்பாணம், ஏப்.2
திருமறைக் கலா மன்றத்தின் நிறுவுநர் நீ.மரிய சேவியர் அடிகள் நேற்றுக் காலமானார். உடல்நலக் குறைவு காரணமாகத் தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டிருந்த அவர் நேற்று இரவு 8 மணியளவில் உயிரிழந்தார். திருமறைக் கலாமன் 19 >

# கல்வியங்காடு சந்தையிலும் தொற்றாளர்கள்

● யாழில் நேற்று 22 பேருக்குத் தொற்று

யாழ்ப்பாணம், ஏப்ரல் 2
யாழ்ப்பாணத்தில் நேற்று 22 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கல்வியங்காடு சந்தையில் மேற்கொள்ளப்பட்ட எழுமாற்று பி.சி.ஆர். சோதனையில் தொற்றாளர்கள் இருவர் கண்டு பிடிக்கப்பட்டுள்ளனர். 19 >

## கொரோனா தொற்றால் மூவர் சாவு

கொழும்பு, ஏப்.2
கொரோனாத் தொற்றால் நாட்டில் மேலும் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று நேற்றிரவு அறிவிக்கப்பட்டுள்ளது.
கட்டுகஸ்தோட்டையைச் சேர்ந்த 80 வயதான பெண் ஒருவரும், எஹலியகொடவைச் சேர்ந்த 80 வயதான ஆண் ஒருவரும், பாணந்துறையைச் சேர்ந்த 85 வயதான ஆண் ஒருவருமே உயிரிழந்துள்ள 19 >



## கட்டுப்பாடுகளைக் கணக்கெடுக்காது யாழ். மாவட்டச் செயலகத்தில் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.2
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று நிலைமை தீவிரமடைந்துள்ளதை அடுத்து, பொதுமக்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் இந்தக் கட்டுப்பாடுகளை அறிவித்திருந்தார். எனினும் மக்களுக்கு முன்மாதிரியாக இருக்க வேண்டிய யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்திலேயே அந்தக் 19 >

## ஒரு லட்சம் பணிவாய்ப்புத் திட்டத்தில் சுகாதாரப் பணியாளர்கள் உள்ளீர்ப்பு!

கொழும்பு, ஏப்.2
வடக்கு மாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாகச் சேவையாற்றுவோரை ஒரு லட்சம் இளையோருக்கு அரச தொழில் வாய்ப்புத் திட்டத்துக்குள் உள்ளீர்த்து நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச பணித்துள்ளார். 19 >

## யாழ்.போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பெண் திடீர்ச் சாவு


*மருத்துவர்களின் கவனயீனம் என்று பெண்ணின் உறவினர்கள் குற்றச்சாட்டு*

யாழ்ப்பாணம், ஏப்.2
யாழ்ப்பாணம் போதனா மருத்துவனையில் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். மருத்துவர்களின் கவனக்குறை 19 >

## மனைவியைக் கொன்ற கணவன் தூக்கில் தொங்கி உயிரிழப்பு!

*நிர்க்கதியான பிள்ளைகள் கிளிநொச்சியில் சோகம்*

கிளிநொச்சி, ஏப்.2
மனைவியின் கழுத்தை நெரித்துக் கொன்ற கணவன், தானும் தூக்கிட்டு உயிரை மாய்த்துள்ளார். இந்தச் சம்பவம் கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிவபுரம் கிராமத்தில் நேற்று நண்பகல் நடந்துள்ளது.
வேலாயுதம் சிவஞானம் (வயது-38), சிவஞானம் குகனேஸ்வரி (வயது-36) ஆகியோரே உயிரிழந்துள்ளனர். குடும்பத் தகராறு காரணமாக இந்தச் சம்பவம் நடந்திருக்கலாம் என்று அயலவர்கள் தெரிவிக்கின்றனர். 19 >



## சந்தேகத்துக்கிடமான அகழ்வு; பொலிஸார் தீவிர விசாரணை

*நல்லூரில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஏப்.2
நல்லூர், சங்கிலியன் சிலை உள்ள பகுதிக்கு அண்மையாக உள்ள வீடொன் 07 >

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிடம் நல்லபெயர் பெறுவதற்காக மக்களை வீதியில் விட்ட அதிகாரிகள்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் குற்றச்சாட்டு



**யாழ்ப்பாணம், ஏப்.2**

**அரசை நெருக்கடிக்குள்ளாக்கக் கூடாது என்ற நினைப்புடன் அரசை திருப்திப்படுத்தி மக்களைப் பட்டினிபோட்டு நடுத்தெருவில் விடும் வகையில் வடக்கு அதிகாரிகள் சிலர் செயற்படுகின்றனர்.**

**இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தருமான ஈ.சரவணபவன் கண்டித்துள்ளார்.**

யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்ததையடுத்து யாழ். நகர் மத்திய பகுதி மற்றும் திருநெல்வேலி பாற்பண்ணை கிராமம் என்பவை முடக்கப்பட்டுள்ளன. அந்தப் பகுதி மக்களுக்கு அரச உதவிகள் எவையும் கிடைக்கவில்லை. அது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் உள்ளதாவது யாழ்ப்பாண நகர் மத்திய பகுதியிலுள்ள நவீன சந்தையில் தொற்றாளர்கள் சிலர் எழுமாற்றுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டனர். அதையடுத்து நகரின் முக்கிய பகுதி முடக்கப்பட்டுள்ளது. சுமார் 225 வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. அவற்றில் பணியாற்றும் 800 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் இதுவரை 117 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

ஆனாலும் மாவட்டச் செயலர் அறிவித்த முடக்கப் பகுதிக்குள் அரச மற்றும் தனியார் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் என்பவை செயற்படுகின்றன. எமது உள்ளூர் வர்த்தக நிலையங்கள் மாத்திரம் மூடப்பட்டுள்ளன.

அதுவும் பண்டிகைக்காலத்தில் எமது வர்த்தகர்கள் பெருமளவு முதலீடு செய்துள்ள நிலையில் அவர்களின் வர்த்தக நிலையங்கள் முடக்கப்பட்டு மறுபுறம் பல்தேசிய மற்றும் தென்னிலங்கை வர்த்தக நிறுவனங்கள் அதற்கு அண்மித்த பகுதிகளில் திறக்க அனுமதிக்கப்பட்டுள்ளன.

இது மாத்திரமல்லாமல் திருநெல்வேலி கிராமத்தின் ஒரு பகுதியான பாற்பண்ணை கிராமம் முடக்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியை அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பினருடன் இணைந்து முடக்கி வைத்துள்ளார்கள். ஆனாலும் 'கண்காணிப்பு வலயம்' என்ற ஒரு சொல்லாடலைப் பயன்படுத்தி வருகின்றனர். முடக்கம் என்று அறிவித்தால் அரசின் 5 ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்க வேண்டும். அது போதாது என்பது வேறு. ஆனாலும் அந்த நிவாரணத் தொகையை மக்களுக்கு வழங்கக்கூடாது என்பதற்காக அல்லது வழங்குவதைத் தவிர்ப்பதற்காக 'கண்காணிப்பு வலயம்' என்று அறிவித்திருக்கின்றார்கள்.

இது தொடர்பில் அதிகாரிகளிடம் தொடர்புகொண்டால், ஒருவரும் பொறுப்பெடுக்கின்றார்கள் இல்லை. பொறுப்பை மற்றவர்கள்மீது சுமத்திவிட்டு தப்பிக்கும் யுக்தியையே கையாள்கின்றார்கள்.

இந்தத் தீர்மானத்தை எடுத்த அதிகாரிகளிடம் நான் ஒன்றைக் கேட்க விரும்புகின்றேன். நீங்கள் அறிவித்த 'கண்காணிப்பு வலயத்தினுள்' உள்ள அன்றாடம் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்துபவர், அந்தப் பகுதியிலிருந்து வெளியே வந்து தனது தொழில் நடவடிக்கைக்குச் செல்ல முடியுமா? இல்லை. அதற்கு பாதுகாப்புத் தரப்பினர் அனுமதிக்கமாட்டார்கள். அப்படியான சூழலில் அவரது குடும்பம் வாழ்வாதாரத்துக்கு என்ன செய்வது? இதையெல்லாம் சிந்திக்காமல், வெறுமனே அரசைக் காப்பாற்றும் வகையில், 'கண்காணிப்பு வலயம்' என்று அறிவித்து பாற்பண்ணை கிராம மக்களின் வயிற்றில் அடித்துள்ளீர்கள்.

தென்னிலங்கை வர்த்தக நிலையங்களில் தொற்று வராது என்ற அடிப்படையில் அவர்களை வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கும் அதிகாரிகளால் ஏன் உள்ளூர் வர்த்தக நிலையங்களை திறக்க அனுமதிக்கக்கூடாது.

இத்தகைய மோசமான நிலைமை ஒன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் நடக்கும் நிலையில், இந்த மாவட்டத்து மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்ட அமைச்சரோ, ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவரோ அல்லது ஏனைய மக்கள் பிரதிநிதிகளோ வாய்மூடி மௌனமாக இருப்பது பொருத்தமற்றது.

பாற்பண்ணைக் கிராமத்தைச் சேர்ந்தவர்களின் வாழ்வாதாரத்துக்கு ஏற்ற வழிவகைகளை அதிகாரிகள் உடனடியாகச் செய்ய வேண்டும். அந்தப் பகுதி மக்களுக்குரிய நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும். அரசிடம் நற்பெயர் வாங்குவதற்காக செயற்படாது, மக்களின் நலன் சார்ந்து சிந்தித்து அதிகாரிகள் செயற்பட- வேண்டும். என்றுள்ளது. (ஒ-5)

போதைப்பொருள் பாவனை:

# வீட்டுக்கும் கேடு நாட்டுக்கும் கேடு

முழங்காவில் மாணவர்கள் போராட்டம்



கிளிநொச்சி, ஏப். 2

கிளிநொச்சி முழங்காவில் மகா வித்தியாலய மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு எதிராக பாடசாலை முன்பாக நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டதோடு பேரணியும் நடத்தினர்.

பாடசாலை மாணவர்கள், முற்பகல் 10 மணியளவில் பூநகரி நாச்சிக்குடா சந்தியிலிருந்து பேரணியாக பாடசாலை வரை சென்று பாடசாலை முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'போதைப்பொருள் பாவனை குடும்ப வன்முறையைத் தூண்டும், புகை நமக்கு பகை, மது அருந்துதல் வீட்டுக்கும் நாட்டுக்கும் கேடு" என பல்வேறு விழிப்புணர்வு பதாகைகளை தாங்கியவாறும் போதைப்பொருள் பாவனைக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர். அது மட்டுமன்றி போதைப் பொருள் பாவனைக்கு எதிரான துண்டுப்பிரசுரங்களையும் வீதிகளில் பயணித்த பொதுமக்களுக்கு மாணவர்கள் வழங்கினர். (து-113)

# தள்ளாடியில் நேற்று டிப்பர் தள்ளாடி வீழ்ந்து விபத்து!

சாரதி மருத்துவமனையில்



மன்னார், ஏப். 2

மன்னார் தள்ளாடி சந்தியில் கிரவல் ஏற்றி வந்த டிப்பர் தடம் புரண்டு சரிந்து வீழ்ந்தது. அதனைச் செலுத்தி வந்த சாரதி காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மதவாச்சி பகுதியிலிருந்து மன்னார் நகருக்குள் கிரவல் மண் ஏற்றிச்சென்ற டிப்பரே நேற்று மதியம் தடம்புரண்டு சரிந்து வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது. சம்பவம் தொடர்பில் மன்னார் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர். (து-213)

ஆயருக்கு அஞ்சலி செய்ய

# எதிர்வரும் திங்கட்கிழமையை துக்கநாளாக அறிவிக்கவும்!

பிரதமருக்கு செல்வம் எம்.பி.கடிதம்

மன்னார், ஏப்.2

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூதவுடல் அடக்கம்செய்யப் படவிருக்கும் நாளான எதிர்வரும் திங்கட்கிழமையை துக்க நாளாக அரசு அறிவிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் பிரதமரிடம் அவசர கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயரின் மறைவு தமிழினத்துக்கு பேரிழப்பாகும். இதற்காக தமிழர்கள் அனைவரும் எதிர்வரும் மூன்று நாள்களுக்கு வீடுகளில் கறுப்புக் கொடிகளைப் பறக்கவிட்டு துக்கதினமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

போர்க் காலத்தில் இன, மத, மொழி, பேதம் பாராமல் மனிதம் மட்டுமே மேன்மை எனக் கருதி அனைத்து மக்களுக்குமான சேவைகளை வழங்கியவர் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை. அவர் சுகவீனம் காரணமாக நேற்று அதிகாலையில் இயற்கை எய்தினார். இது பற்றி பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளேன்.

கடந்த மூன்று நாள்களுக்கு முன்னர் பௌத்த மதத் தலைவர் ஒருவர் இறந்த போது, அவரது பூதவுடல் அடக்க தினத்தை துக்க நாளாக அரசு அறிவித்து இருந்தது.

அதேபோன்று மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வு நிலை ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் அடக்க தினமான திங்கட்கிழமையை துக்க நாளாக அரசு அறிவிக்க வேண்டும் எனக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளேன். என்று தெரிவித்தார். (து-56)

# சங்கானை மகாமாரிக்கு கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 2

சங்கானை குளத்தடி வீதி ஸ்ரீ பேய்ச்சி மகாமாரி அம்பாள் தேவஸ்தான புனராவர்த்தன அஷ்டபந்தன நவ குண்ட பக் ஷ பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

இன்று காலை 5.30 மணிக்கு விநாயகர் வழிபாட்டுடன் கும்பாபிஷேக நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

கும்பாபிஷேக நிகழ்வுகளை சிவ பிரம்ம ஸ்ரீ சிவ நித்தியானந்த [illegible] மேற்கொள்கின்றார். (து319)

# மன்னார் பட்டதாரிகளுக்கு வழங்கப்பட்டன நியமனங்கள்

மன்னாரில் பட்டதாரிகள் 54 பேருக்கு நேற்று நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டன.

மன்னார் மேலதிக செயலர் சி.குணபாலனின் தலைமையில், மன்னார் மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமெல் குறித்த நியமனங்களை செயலகத்தில் வைத்து வழங்கினார்.

மன்னார் நானாட்டான், மாந்தை மேற்கு மற்றும் மடு முசலி ஆகிய பிரதேச செயலக அலுவலர்களுக்கான நியமனங்களும், முதியோர் அபிவிருத்தி மற்றும் இணக்க சபை அபிவிருத்தி அலுவலர்களுக்கான நியமனங்களும் இதன்போது வழங்கப்பட்டன.

இவர்கள் அனைவரும் எதிர்வரும் திங்கட்கிழமை கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளனர். (ற-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் உரிமைக்குரலாக திகழ்ந்தவர் ஜோசப் ஆண்டகை

## இரா. சம்பந்தன் இரங்கல்



**கொழும்பு, ஏப்.2**
**மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப்பின் மறைவானது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட ஒரு பேரிழப்பாகும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.**

ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவை அடுத்து வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
ஆண்டகை ஆயர் இராயப்பு ஜோசப் பல தசாப்தங்களாக மக்களின் உரிமைக்குரலாக திகழ்ந்தவர்.
மக்களோடு மிகவும் நெருங்கிப்பழகிய ஆயர், தமிழ் மக்களின் இக்கட்டான அனைத்துக் கட்டங்களிலும் தாம் நேசித்த மக்களுக்காக முன்னின்று போராடிய ஒருவராவார்.
இன மத மொழிகளுக்கு அப்பால் சாதாரண மக்களின் உரிமைகளுக்காக எவ்வித தயக்கமும் பாரபட்சமும் இல்லாமல் அயராது பணியாற்றிய ஒரு தலைவரை இன்று நாம் இழந்துள்ளோம். மக்களின் உரிமைகளுக்காக போராடிய மறைந்த ஆண்டகை இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பிரயத்தனங்கள் மெய்ப்பட வேண்டும் என நாம் இறைவனை பிரார்த்திப்பதோடு, ஆண்டகையின் மறைவால் துயறுற்றி ருக்கும் அவரது உறவினர்கள் திருச்சபை மக்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ-22)

# ரவி கருணாநாயக்க பிணையில் விடுவிப்பு



கொழும்பு,ஏப்.2
முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட 7 பிரதி வாதிகளை பிணையில் விடுவிக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்ற மூவரடங்கிய நீதி பதிகள் குழாம் நேற்று உத்தரவிட்டது.
2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி இடம்பெற்ற மத்திய வங்கியின் பிணைமுறி ஏலத்தின் போது, 15 பில்லியன் ரூபா பெறுமதியான முறிகளை முறையற்ற விதத்தில் கையாண்டனர் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
இது தொடர்பான வழக்கு விசாரணையில், அமல் ரணராஜா, நாமல் பலல்லே மற்றும் ஆதித்யா பட்டபெந்திகே ஆகிய நீதிபதிகள் அடங்கிய குழாத்தால் பிணை உத்தரவு பிறப்பிக்கப்பட் டுள்ளது. தலா 10 லட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப் பிணையிலும், 100 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் சந்தேக நபர்களை விடுவிக்கு மாறு உத்தரவிடப்பட்டது. அத்துடன் சந்தேக நபர்களின் வெளிநாட்டு பயணங்களுக்கும் தடை பிறப்பிக்கப்பட்டது.
இது தொடர்பில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கும், விமான நிலைய அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்த வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (க-இ)

# ரி.ஐ.டியினரால் நால்வர் கைது

கொழும்பு.ஏப்.2
தீவிரவாதக் கருத்துக்களைப் பரப்பிய குற்றச்சாட்டில், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
அவர்களில் இருவர் கொழும்பிலும், மற்றைய இருவர் மூதூரிலும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.
இவர்கள் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரானின் கருத்துக்களை சமூக ஊடகங்களில் பதிவிட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (க-இ)

# நாடு கடத்தப்பட்டவர்களிடம் சி.ஐ.டி., ரி.ஐ.டி. விசாரணை

## சரத் வீரசேகர தகவல்

கொழும்பு, ஏப். 2
சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனிலிருந்து நாடு கடத்தப்பட்ட 24பேரிடமும், குற்றப் புலனாய்வுப் பிரிவு (சி.ஐ.டி.), மற்றும் பயங்கரவாத தடுப்புப் பிரிவு (ரி.ஐ.டி.) என்பவை விசாரணைகளை நடத்தும். அதன் பின்னரே அவர்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்படும்.
இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.
குடிவரவு குடியகல்வுச் சட்டத்தை மீறி 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் சுவிட்சர்லாந்து மற்றும் ஜேர்மனியில் சட்ட விரோதமான முறையில் தங்கியிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் ஜேர்மனிலிருந்து 20 பேரும், சுவிட்சர்லாந்தில் இருந்து 4 பேரும் நாடு கடத்தப்பட்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை நேற்று முன்தினம் இரவு வந்தடைந்தனர்.
இவர்கள் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.க,22)

# திருமலையின் மேலதிக மாவட்டச் செயலராக அருள்ராஜ்

திருகோணமலை மாவட்டத்தின் மேலதிக மாவட்டச் செயலராக நியமனம் பெற்றுள்ள இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் தர உத்தியோகத்தரான ஜே.எஸ். அருள்ராஜ் தமது கடமைகளை நேற்று மாவட்டச் செயலகத்தில் பொறுப்பேற்றுள்ளார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர் 2003 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவைக்கு தெரிவுசெய்யப்பட்டார். கிண்ணியா மற்றும் சேருவல பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும் முன்னர் இருந்த வடகிழக்கு மாகாண சபை மற்றும் கிழக்கு மாகாண சபை ஆகியவற்றில் உப பதவிகளிலும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் மற்றும் கிழக்கு மாகாண தொழில் திணைக்களப் பிரதி ஆணையாளர் ஆகிய பதவிகளையும் வகித்துள்ளார். இவர் மேலதிக மாவட்ட செயலராக பதவியேற்க முன்னர், திருகோணமலைப் பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளராக கடமையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ற-40)

# கறுப்புப்பட்டியலிலுள்ளோர் சிறையிலடைக்கப்படுவர்!!!

## அமைச்சர் சரத் வீரசேகர தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 2
இலங்கையிலுள்ள பலரது பெயர்களும் கறுப்புப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவர்கள் அனைவரும் சிறையில் அடைக்கப்படுவார்கள். அத்துடன் அவர்களுடன் தொடர்புகளைப் பேணுபவர்களும் சிறையிலடைக்கப்படுவார்கள். இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.
இலங்கை அரசு அண்மையில் தடை செய்யப்பட்ட தனி நபர்கள் மற்றும் அமைப்புக்களின் பட்டியலை வெளியிட்டது.
இந்தப் பட்டியலில் தடை செய்யப்பட்ட நபர்களாக அறிவிக்கப்பட்ட சிலர் இலங்கையில் வசித்து வருகின்றனர். இவ்வாறானதொரு நிலையில் அவர்களை இலங்கை அரசு நாடு கடத்துமா என்று அமைச்சர் சரத் வீரசேகரவிடம் கேட்டபோது,
அரசு வெளியிட்ட தடைப் பட்டியலில் உள்ளவர்கள் இலங்கையில் இருந்தால் அவர்கள் சிறையில் அடைக்கப்படுவார்கள். அவர்களுடன் தொடர்புகளைப் பேணுவோரும் சிறையில் அடைக்கப்படுவார்கள், என்றார். (ஒ.5.22)

# வடக்கில் உள்ள கட்டுப்பாடுகளை ஒருபோதும் தளர்த்த வேண்டாம்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள்

கொழும்பு, ஏப்.2
வடக்கில் கொரோனாத் தொற்று அதிகரித்துள்ள நிலையில் சுகாதார நடைமுறைகளில் உள்ள இறுக்கத்தை தளர்த்த வேண்டாம் என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இது தொடர்பில் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;
வடக்கில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்தவண்ணம் உள்ளனர். இந்நிலையில் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் பொதுமக்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் பயணம் செய்கின்றனர். விசேடமாக பெரும்பாலான ஆசிரியர்கள் வெளி மாவட்டங்களில் கடமையாற்றுகின்றனர். அவர்கள் பயணிக்கும் பஸ்களில் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்படுவதில்லை. இது தொடர்பாக அதிக கவனம் செலுத்தப்படவேண்டும் என்று வேண்கோள் விடுக்கப்பட்டது.
இதற்கு பதிலளித்த வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் "குறித்த விடயம் தொடர்பில் பொலிஸாரே நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.
இதைவிட வெளிமாகாணம், மாவட்டங்களில் தொழில் நிமித்தம் சென்று வருவோருக்கு முன்னைய இறுக்கமான நடைமுறைகள் இல்லை என்பதையும், அதனால் கூடவே பணியாற்றுவோருக்கு அது ஆபத்தானது என்பதையும் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் எடுத்துரைத்தார். என்றுள்ளது. (ஐ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசு கவிழ்ந்தமைக்கு ரணிலும் மைத்திரியுமே காரணம்

## சாடுகிறார் பேராசிரியர் சரத் விஜயசூரிய



**கொழும்பு, ஏப்.2**

**ரணில் விக்கிரமசிங்கவின் முட்டாள்தனமான நடவடிக்கைகளும், மைத்திரிபால சிறிசேனவின் வினைத்திறனற்ற செயற்பாடுகளுமே நல்லாட்சியை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்ல முடியாது போனமைக்குக் காரணமாக அமைந்தன என சமூக நீதிக்கான தேசிய இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சரத் விஜயசூரிய சாடியுள்ளார்.**

ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது. நாட்டை தாங்கள் பாதுகாப்போம், நாட்டின் வளங்கள் வெளிநாட்டினருக்கு விற்கப்படுகின்றன உள்ளிட்ட பொய்யான பிரசாரங்களை கூறி தற்போதைய அரசாங்கம் ஆட்சியை கைப்பற்றியது. ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவர தலையிட்ட துறவிகள் கூட இப்போது அரசாங்கத்தை தூற்றுகிறார்கள். ஆனால் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள், அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறி ஒரு வருடம் கடந்த போதிலும் நிறைவேற்றப்பட வில்லை. இந்த அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றக் காரணமாக இருந்த மக்களும் தாம் ஆட்சியில் அமர்த்திய அரசாங்கத்தின் மீது தற்போது வெறுப்படைய ஆரம்பித்துள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ-இ)

# ஆசிய பளுதூக்கல் போட்டிக்கு இலங்கையிலிருந்தும் நால்வர்

கொழும்பு,ஏப்.2

ஆசிய பளுதூர்க்கல் வல்லவர் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி நால்வர் பங்கேற்பர் என்று இலங்கை பளுதூக்கல் சம்மேளனம் தெரிவித்துள்ளது. இசுறு குமார, இந்திக்க திசாநாயக்க, திலங்க விராஜ் பலங்கசிங்க, சத்துரிக்கா பிரியந்தி ஆகியோரே இந்தப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை உஸ்பெகிஸ்தானின் தாஷ்கெண்ட் நகரில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

2020 ஆம் ஆண்டு நடைபெறவிருந்த இப் போட்டி கொரோனாத் தொற்றுக் காரணமாக பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்க்து. (க-இ)

# மாகாணத் தேர்தலில் எமது பலம் தெரியும்

## எதிர்க்கட்சிக்கு அரச தரப்பு சவால்

கொழும்பு,ஏப்.2

எமது பலத்தை எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் நடக்கும் போது பார்த்துக் கொள்ளுங்கள் என்று எதிர்கட்சிக்கு, போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே சவால் விடுத்துள்ளார்.

சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமை அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசியல் பழிவாங்கல் தொடர்பிலான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் விசாரணை நடவடிக்கைகளில், ஜனாதிபதியின் தலையீடு உள்ளது என்று எதிர்த் தரப்பினர் குறிப்பிடுகின்றனர். நல்லாட்சி அரசால் மேற்கொள்ளப்பட்ட அரசியல் பழிவாங்கல் குறித்து ஆராய்வதற்கு, 2019 ஆம் ஆண்டுக் காலப் பகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் குறைகேள் அதிகாரி காரியாலயம் நிறுவப்பட்டது.

அரசியல் பழிவாங்கல் குறித்து பலதரப்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து, அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய்வதற்கு, ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. எவ்வித அரசியல் அழுத்தங்களுமின்றி ஆணைக்குழு விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுத்தது. நல்லாட்சி அரசின் அரசியல் அதிகாரத்தால் பாதிக்கப்பட்ட அரச சேவையாளர்களுக்கு நியாயம் பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசுக்கு உண்டு. என்றார். (க-இ)

# சக்கர நாற்காலி வழங்கி வைப்பு

சாவகச்சேரி, ஏப்..2

வேலணையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற லயன்ஸ் கழக நிகழ்வில் நிலையத் தலைவர் வி.சிறிகரனிடம நீர்கொழும்பு ஒரியன்ற் லயன்ஸ் கழகத்தினரால் மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையத்துக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ள சக்கர நாற்காலியொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் நடக்க முடியாத நிலையில் உள்ளவர்களுக்கு மாற்று அடிப்படையில் வழங்கவென இந்தச் சக்கர நாற்காலி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-9)

# தேசியப்பட்டியல் யாருக்கு? இன்னும் முடிவில்லை

## குழப்பத்தில் ஐ.தே.க.

கொழும்பு,ஏப்.2

ஐக்கிய தேசிய கட்சியைப் பிரதி நிதித்துவப்படுத்தும் விதத்தில் சரியான நேரத்தில் சரியான ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவோம். எனினும் கிராம மட்டத்தில் கட்சியைப் பலப்படுத்தும் வேலைத் திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றோம் என்று கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாடாளுமன்றம் செல்வதற்கான மக்கள் ஆணை கிடைக்கவில்லை. இருந்த போதிலும் தேசிய பட்டியலில் ஒரு ஆசனம் கிடைந்திருந்தது. அந்த இடத்துக்கு ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் பெயரைக் கட்சியின் செயற்குழு ஏற்கனவே தீர்மானித்தது. அது தொடர்பில் அவருக்கு அறிவித்திருந்தது. ரணில் விக்கிரமசிங்க அதற்கான விருப்பத்தை இதுவரை தெரிவிக்கவில்லை.

தலைவர் தேசியப்பட்டியல் உறுப்பினராக நாடாளுமன்றுக்குச் செல்ல மறுத்தால் பிரதித் தலைவர் என்ற வகையில் நான் செல்ல வேண்டும் என்ற கோரிக்கையும் உள்ளது. நான் மக்களால் தெரிவு செய்யப்பட்டால் மாத்திரமே நாடாளுமன்றுக்குச் செல்வேன்- என்றார். (க-இ)



# கௌரவிப்பு நிகழ்வு

கொடிகாமம், ஏப்.2

மந்துவில் றோ. க. த. க பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் ந. தமிழ்ச்செல்வன் தலைமையில் நேற்று நடைபெற்றது. சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் நடந்த இந் நிகழ்வில் லயன்ஸ் கழகத்தலைவர் லயன் கோகுலன், அதிதியாக கலந்து கொண்டார். (வ-159)

# புத்தாண்டை முன்னிட்டு பொருள்கள் மலிவு விலையில்



## ச.தொ.சவில் 12 பொருள்கள் ஆயிரம் ரூபாவுக்கு

கொழும்பு,ஏப்.2

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு, 27 அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. அத்துடன் சகல ச.தொ.ச விற்பனை நிலையங்கள் ஊடாக, 12 அத்தியாவசியப் பொருள்களை ஆயிரம் ரூபா வுக்கு கொள்வனவு செய்ய முடியும் என்று வர்த்தகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பண்டிகைக் காலத்தில் பொதுமக்களுக்கு பல்வேறு துறைகள் ஊடாக நிவாரணம் வழங்க அரசு தீர்மானித்துள்ளது. அதற்கமைய சதொச விற்பனை நிலையம் ஊடாக அத்தியாவசிய உணவுப் பொதி நிவாரண அடிப்படையில் இந்த மாத இறுதி வரை விற்பனை செய்யப்படும். வெள்ளை அரிசி, நாட்டரிசி, வெள்ளைச் சீனி, பருப்பு, கோதுமை மா, உப்பு, நெத்தலி, துண்டு மிளகாய், தேயிலைத் தூள், சோயா மற்றும் முகக்கவசம் ஆகிய 12 அத்தியாவசியப் பொருள்கள் அடங்கிய பொதி ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும். அதே வேளை அத்தியாவசிய உணவு பயிர்கள் பல தேசிய மட்டத்தில் பயிரிடப்பட்டுள்ளன. எதிர்பார்க்கும் விளைச்சல் கிடைக்கப் பெற்றவுடன் தற்போது விலை அதிகரிக்கப்பட்டுள்ள மஞ்சள், உழுந்து, பயறு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களின் விலை குறைக்கப்படும். நாட்டில் கொவிட்19 வைரஸ் தாக்கத்தால் பொருளாதாரத்துக்கு பல சவால்கள் ஏற்பட்டுள்ளன. சில அன்றாட பாவனைப் பொருள்களுக்கான இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதால், அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளன.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்துவதே அரசின் பிரதான இலக்காகக் காணப்படுகிறது. அரிசியின் விலையில் தளம்பல் நிலை ஏற்படுவதற்கு பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

சிறு மற்றும் மொத்த உற்பத்தியாளர்களிடமிருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை நேரடியாகக் கொள்வனவு செய்யும் புதிய வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

விலை மனுக்கோரல் ஊடாக பொருள்களைக் கொள்வனவு செய்யாமல், கையிருப்பின் அடிப்படையில் பொருள்களைக் கொள்வனவு செய்யும் வழிமுறை தற்போது செயற்படுத்தப்படுகிறது. என்றார். (க-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நீதியின் தாமதிப்பும் மறுப்பும்

ஒரு நாட்டின் சட்டம், ஒழுங்கு, நீதி நிர்வாகச் செயற்பாட்டு இயக்கம் என்பவை அந்த நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வேண்டியவை. அதே சமயம், நாட்டில் வாழும் அனைத்துத் தரப்பு மக்களினதும், இன, மத, மொழி சார் வேறுபாடுகளுக்கப்பால் அவர்களின் இயல்பு வாழ்வைத் தொடர உத்தரவாதம் அளிப்பவையாக இருக்க வேண்டும். அத்துடன் அவர்களது பாதுகாப்பு, அரசியல், வாழ்வியல் மற்றும் சமூகவியல் சார் உரிமைகளை சம நிலையில் அங்கீகரித்து , கௌரவித்து அனைவரும் அச்சமற்ற சூழ்நிலையில் வாழ வழி செய்ய வேண்டும். இதுவே ஜனநாயகத்தின் அடிப்படைக் கோட்பாடும் தர்மமும்.

இலங்கையில் சட்டம், ஒழுங்கு, நீதி, நிர்வாகச் செயற்பாட்டுக் கட்டமைப்புக்களின் இலக்கு என்பவை மேற்குறிப்பிட்ட ஜனநாயக கோட்பாட்டுத் தர்மத்தின் தடத்தில் இயங்குகின்றனவா? என்ற கேள்விக்கான பதில், இல்லை! என்பதே.

அந்த வகையில் இன, மொழி மற்றும் மதம் சார் வேறுபாடுகளின் தனித்துவ தர நிர்ணய அடிப்படையிலான பேரினவாதச் சிந்தனையுடன் கூடிய அரச பீடத்தவரின் ஆட்சி முறையும் அரசியல் அபிலாஷைகளும் ஜனநாயகத்தன்மை கொண்டவையாக இருக்கும் என நம்புதல் கடினமே! அவர்களின் நோக்கம் எப்போதுமே அரசியல் அதிகாரம் தம்வசம் முழுமையாக இருக்க வேண்டும் என்பதை மையப்படுத்தியதாகவே இருக்கும். சரிநிகர் சமனாக அனைத்துத் தரப்பினரையும் பார்க்கும் தன்மை அவர்களிடம் ஒருபோதும் இருந்ததுமில்லை; இனி இருக்கப் போவதுமில்லை.

இதனை அவர்கள் இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை நிறைவேற்று அதிகார வலுவுடன் பொறுப்பேற்ற அன்றைய தினமே "இது ஒரு பௌத்த - சிங்கள நாடு. இது பௌத்த - சிங்கள மக்களால் பெரும்பான்மை பலத்துடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு" என்பதைப் பிரகடனப்படுத்தாமலே உறுதி செய்திருந்தார்கள்.
இந்த நிலையில் சட்டம் என்பது மக்களைப் பாதுகாக்கும் உயரிய நோக்குடன் பேணிப் பாதுகாக்கப்படும் என நம்புதல் சாத்தியமே இல்லை .
கொரோனாப் பரம்பலைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் அரசு, அதனைக் காரணம் காட்டி நாட்டின் சிறைச்சாலைகளில் கைதிகளின் தொகையை குறைக்க கைதிகளுக்குப் பொது மன்னிப்பு அளித்து விடுதலை செய்யும் ஒரு திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

அதில் 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் வரையிலான சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட உள்ளனர். இந்த நிலையில் அரசியல் கைதிகள் எவரும் விடுதலை செய்யப்படப் போவதில்லை என நீதி அமைச்சர் அலி சப்ரி தெளிவாகத் தெரிவித்துள்ளமையானது, இந்த நாட்டின் சட்டம், ஒழுங்கு, நீதிச் செயற்பாடுகள் தொடர்பாகப் பல செய்திகளைச் சொல்லாமல் சொல்லி நிற்கின்றன.

பல்வேறு தீவிர குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் மற்றும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளும் அரசியல் உள்நோக்குடன் விடுதலை செய்யப்படவுள்ளனர். இந்தநிலையில் ஆயுள் தண்டனைக் காலத்துக்கும் மேலாக, விசாரணைகள் ஏதுமின்றி வெறுமனே அரசியல் காரணங்களுக்காக சிறைவாசம் அனுபவிப்போரை விடுதலை செய்ய அல்லது விசாரணை செய்து தண்டனையை முடிவு செய்ய அரச சட்ட ஒழுங்கு நீதிக்கட்டமைப்பு தாமதம் செய்வது என்பது கூட மிகப் பெரும் மனித உரிமை மீறல் செயற்பாடே. இதனைத் தட்டிக் கேட்கவும் நீதிகோரவும் இந்த நாட்டில் எவரும் இல்லை என்பதே பெருந்துயரம். வெறுமனே அறிக்கைகளும் கண்டனங்களும் நீதியையும் நியாயத்தையும் வென்றெடுத்துத் தரப்போவது கிடையாது.

அரசியல் கைதிகள் பெரும்பாலும் தமிழர்கள். ஏனையோர் ஆட்சியாளரின் அதிருப்தியாளர்கள். ஆகவே அவர்களுக்கான நீதி தாமதிக்கப்படும் நீதியாகின்றது. தாமதிக்கப்படுகின்ற நீதி மறுக்கப்படுகின்ற நீதி என்பதே தத்துவம். சட்டம் ஒழுங்கு, நீதி நிர்வாக கட்டமைப்புகளுக்கான சுயாதீனச் செயற்பாட்டு பொறிமுறையில் அரசியல் தலையீடு அதிகரிக்கும் போது அந்த நாடு ஜனநாயகத் தன்மையை இழந்து சர்வாதிகாரத்தை நோக்கி விரைகிறது என்பதே அர்த்தம்.



# இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்கின்றன!

## அமெரிக்க இராஜாங்க திணைக்களம் அறிக்கை


**கொழும்பு, ஏப். 2**

**இலங்கையில் கடந்த ஆண்டு பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.**

2020 ஆம் ஆண்டுக்கான இலங்கை தொடர்பான மனித உரிமை அறிக்கையை அமெரிக்க இராஜாங்க திணைக்களம் வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையிலேயே மேற்படி விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
கடந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின்போது கொரோனா பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக சர்வதேசக் கண்காணிப்பாளர்கள் கலந்துகொள்ளவில்லை.
இந்தத் தேர்தலின்போது கட்டுப்பாடற்ற பரப்புரைச் செலவுகள் இடம்பெற்றதுடன் அரச வளங்களும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டன.
தேர்தலின் பின்னர் 20ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இது ஆணைக்குழுக்களின் சுயாதீன தன்மையை இல்லாது செய்துள்ளது என எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புக்களும் சுட்டிக் காட்டின. ஜனாதிபதிக்கு கட்டுப்பாடற்ற அதிகாரங்கள் கிடைப்பதற்கு வழிசெய்துள்ளமை ஆபத்தானது என்று அவை குறிப்பிட்டன.
ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் கொண்டு வரப்பட்ட அவசர காலச் சட்டம், ஒவ்வொரு மாதமும் புதுப்பிக்கப்பட்டு இராணுவத்தை தொடர்ந்தும் நிலைநிறுத்த உதவுகின்றது.
ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகத்தில் பலர் கைதானபோதும் இதுவரை எவர் மீதும் வழக்குத் தொடுக்கப்படவில்லை.
மேலும், அரசின் சட்டவிரோத கைதுகள், சித்திரவதைகள், மனிதாபிமானமற்ற செயற்பாடுகள் என்பவை தொடர்கின்றன எனவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ.இ)

# பலமான சக்தியாக நாம் இயங்காத வரை அரசியல் கைதிகள் தொடர்ந்தும் அகதிகளே

## அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவிப்பு



வவுனியா, ஏப்.2
நாம் ஒரு பலமான சக்தியாக இயங்காத வரைக்கும் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் அகதிகளாகவே இருக்க நேரிடும் என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சக்திவேல் தெரிவித்தார்.
அரசியல் கைதிகளின் தற்போதைய நிலைவரம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;
அரசியல் கைதிகள் இன்று அரசியல் அநாதைகள் ஆக்கப்பட்டுள்ளனர். இதற்கு காரணம் ஒட்டுமொத்த அரசியல் தமிழ்த் தலைமைகளுமே!. இந்தப் பிரச்சினை இன்று சிவில் சமூகங்கள் பொறுப்பேற்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளன.
அரசியல் கைதிகளின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதொன்று. கடந்த ஆட்சிக்காலத்தில் தீர்த்திருக்கலாம்.
ஆனால் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரலில் இதற்கு முன்னுரிமை கொடுக்கப்படவில்லை.
அரசியல் கைதிகள் என அடையாளப்படுத்தப்படுபவர்கள் தான் ஒருகாலத்தில் அரசியலை முன் நகர்த்தியவர்கள். இவர்கள் பலமாக இருந்ததனால் தான் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பேச்சுவார்த்தைகள் அன்று நடந்த அன்று பலமான சக்தியாக இருந்த அரசியல் கைதிகளை இன்று யாரும் கண்டுகொள்ளாத நிலையில் அநாதைகளாக கைவிடப்பட்டு அகதிகளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.
தற்போது இருக்கும் அரசாங்கம் அரசியல் கைதிகளே இல்லை எனக் கூறுவதைப் பார்க்கும் போது அவர்களுக்கான விடுதலையே இனி இல்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது.
அரசியல் கைதிகள் தமது கோரிக்கையை, அரசாங்கத்திடம் வைப்பதா? தமது அரசியல் தலைமைகளிடம் வைப்பதா? சிவில் சமூகத்திடம் வைப்பதா?பொதுமக்களிடம் வைப்பதா? என தெரியாது அரசியல் அகதிகளாகவும், அரசியல் அநாதைகளாகவும் இருக்கின்றார்கள் - என்றார். (ஐ-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயருக்கு அஞ்சலி செலுத்துவோர் இறுதிவரை காத்திருக்க வேண்டாம்

## மன்னார் மறைமாவட்ட ஆயர் தெரிவிப்பு

**மன்னார், ஏப்.2**




**முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையின் பூதவுடல் எதிர்வரும் திங்கட்கிழமை நல்லடக்கம் செய்யப்படவுள்ள நிலையில் , சுகாதார நடைமுறைகளை பின்பற்ற வேண்டி யிருப்பதால் அஞ்சலி செலுத்துவோர் இறுதிவரை காத்திருக்க வேண்டாம் என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.**

மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மரண இறுதிச் சடங்கு தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

மன்னார் மறைமாவட்டத்தில் சுடர் விட்டு பிரகாசித்த ஒளி விளக்கு தற்போது அணைந்து விட்டது. ஆயரின் இறுதிச் சடங்கு மன்னார் மறைமாவட்டத்தின் அருட்பணியாளர்கள் மற்றும் ஆலோசனைக் குழுக்களின் தீர்மானத்துக்கு அமைவாக நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக தற்பொழுது ஆயரின் உடல் யாழ். ஆயரின் சிற்றாலயத்தில் நாளை (இன்று) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.30 மணி வரை வைக்கப்பட்டு, பின் அவரின் உடல் மன்னார் மறைமாவட்டத்துக்கு எடுத்துவரப்படும்.

பவனியாக மன்னாருக்கு கொண்டு வரப்படும் ஆயரின் பூதவுடல் மன்னார் மறைமாவட்டத்தின் ஆயரின் சிற்றாலயத்தில் பிற்பகல் 2 மணி தொடக்கம் வைக்கப்படும். இந்நேரத்தில் பொது மக்கள் இங்கு வந்து அவரின் ஆன்மா இளைப்பாற்றுக்காக இறைவேண்டுதல் செய்வதுடன் அவருக்கு அஞ்சலி செலுத்தவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் மன்னார் ஆயரின் இல்லத்திலிருந்து பவனியாக மன்னார் மறைமாவட்டத்தின் பேராலயமான புனித செபஸ்தியார் பேராலயத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்பட்டு. எதிர்வரும் திங்கட்கிழமை மாலை 2 மணி வரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும். பின்னர் மன்னார் பேராலயத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும். கொரோனாத் தொற்றுநோய் காரணமாக சுகாதார நடைமுறைகளுக்கு எற்ப இந்தச் சடங்குகளை முன்னெடுக்க வேண்டியிருப்பதால் கடைசிவரை காத்திராது அஞ்சலி செலுத்த விரும்புவோர் நேரகாலத்துடன் வந்து அஞ்சலி செலுத்துவது சாலச் சிறந்தது - என்றார்.

(ஐ-60,56, 20)

# தமிழ் மக்களின் விடுதலைப் பாதையில் ஆயரின் பங்களிப்பு மதிப்பிட முடியாதது

*வலி.கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் நிரோஸ் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஏப்.2

தமிழ் மக்களின் விடுதலைப் பாதையில் மறைந்த ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகையின் பங்களிப்பு மதிப்பிடப்பட முடியாதது என்று வலி.கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

மன்னார் மறைமாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவையொட்டி வெளியிட்ட இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

போரின் போதும் போருக்குப் பின்பாகவும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அடக்குமுறைகளை நியாயமாக வெளிப்படுத்தும் நடுநிலையாளராக மறைந்த ஆயார் அதிமேதகு இராஜப்பு ஜோசப் ஆண்டகை செயற்பட்டார்.

தமிழ்த் தேசியப் பரப்பில் மதங்களைக் கடந்து எமது மக்கள் விடுதலை அடைய வேண்டும் என்ற உறுதியோடு பயணித்த உத்தமர் ஒருவரையே தமிழ் இனம் இழந்து நிற்கின்றது. ஜனநாகக் கருத்துருவாக்கத்திலும் மனித உரிமைகளுக்காக குரலற்றவர்களுக்கான குரலாக விளங்கியமையிலும் ஆயரின் பணி அளப்பரியது- என்றார்.

(ஐ-13)

# இறைபணியுடன் மட்டும் நின்றுவிடாது ஆயர் மக்கள் பணியிலும் ஈடுபட்டார்

## விக்னேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.ஏப்.2

கத்தோலிக்க மக்களின் புனிதவாரம் அனுஷ்டிக்கப்படும் இந்த வாரத்தில் அவர் இறையடி சேர்ந்தமை அவரின் இறை வாழ்க்கையைக் கோடிட்டுக் காட்டுகின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட முன்னாள் ஆயர் யோசப் ஆண்டகையின் மறைவை முன்னிட்டு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆயர் பணியில் 25 வருடங்கள் சிறப்பாக பணியாற்றி ஓய்வு பெற்ற போதும் அவர் வெறுமனே இறைபணியுடன் மட்டும் நின்றுவிடாது மக்கள் பணியிலும் விசேடமாக தமிழ் மக்கள் சார்பான நலன்கள் தொடர்பில் அதீத அக்கறை காட்டியதுடன் அனைவரும் இந்ந நாட்டின் குடிமக்களாக சகோதரத்துவத்துடன் வாழக்கூடிய வகையில் நேரிய வழிகாட்டியாக வாழ்ந்து எம்மையெல்லாம் அரவணைத்துச் சென்றவர் ஆண்டகை ஆவார்.

அன்னார் இயற்கை எய்திய செய்தி எம்மை மிகவும் வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளது. அவரின் ஆத்மா இறைவனடி சேர்ந்து சாந்தி பெற நாம் யாவரும் யாசிப்போம் - என்றார். (ஐ)

## மஹிந்தவின் உறவினருக்கு அமெரிக்காவில் முக்கிய பதவி

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் நெருங்கிய உறவினர் ஒருவர், அமெரிக்காவில் முக்கியமான பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்காவிலுள்ள இலங்கையின் கொன்சியூலர் நாயகமாக மருத்துவர் லலித் சந்திரதாஸ என்பவர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் தங்கை முறை உறவினர் ஒருவரை திருமணம் செய்துள்ளார். (க-இ)

# தமிழர்களின் பலமாக செயற்பட்டவர் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை

*ஆயரின் மறைவுக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இரங்கல்*

யாழ்ப்பாணம், ஏப்.2

ஈழத்தமிழர்களின் உரிமைக்கான போராட்ட காலத்திலும், போர் நிறைவுபெற்றதன் பின்னரும், ஒடுக்கப்படும் ஈழத் தமிழ் மக்களின், பலமான குரலாக செயற்பட்ட ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் மறைவு கத்தோலிக்க திருச்சபைக்கும், தமிழ்த் தேச மக்களுக்கும் ஈடு செய்யப்பட முடியாத பேரிழப்பாகும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

குருத்துவத்தின் புனிதத்தையும், மேன்மையையும் தாங்கி, ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் உண்மையானதும் நீதியானதுமான பொறுப்புக்கூறலுக்காக, ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் குரல் ஓங்கி ஒலித்துக் கொண்டிருந்தது.

ஆண்டகையின் வெற்றிடத்தை நிரப்புவது என்பது கடினமான பணியாகும். ஈழத்து திருச்சபையின் பணியாளர்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பதை ஆண்டகையின் வாழ்வும் குருத்துவமும் எடுத்துக்காட்டியுள்ளது.

தமிழ் மக்களுக்கான நீதிக்காக ஓங்கி ஒலித்த குரல் இன்று அமைதியில் உறங்குகின்றது. தமிழ் மக்களின் உணர்வுகளுடன் கலந்து, உடலால் அமரத்துவம் அடைந்த ஆண்டகையின் ஆன்மா நித்திய அமைதி அடையவேண்டி இன்றிலிருந்து (நேற்று)மேதகு ஆண்டகையின் திருவுடல் அடக்கம் செய்யப்படும் வரை தமிழ்த் தேசத்தில் துக்க நாளாக அனுஷ்டிக்குமாறும் கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)







# முன்னாள் ஆயருக்கு மக்கள் கூடி அஞ்சலி



யாழ்ப்பாணம்,ஏப்.2

மன்னார் மாவட்ட முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையின் திருவுடலுக்கு, மக்கள் ஒன்று கூடி அஞ்சலி செலுத்தினர்.

யாழ்ப்பாணம் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் அவரது திருவுடல், அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அரசியல் பிரமுகர்கள், மதகுருமார்கள், சமூக ஆர்வலர்கள் மறைந்த ஆயருக்கு நேரடியாகச் சென்று அஞ்சலி செலுத்தினர்.

யாழ்.மறை மாவட்ட ஆயர் [illegible] முதல்வர் தலைமையில் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றன.

முன்னாள் ஆயர் இராயப்பு ஜோசப் நேற்றுக் காலை காலமானார். ஆயரின் இறுதித் திருப்பலி எதிர்வரும் திங்கட்கிழமை மாலை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெறவுள்ளது. (க-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையர்களுக்கு சீனத் தடுப்பூசி வேண்டாம்

## மருத்துவர்கள் போர்க்கொடி

**கொழும்பு, ஏப். 2**

**உலக சுகாதார நிறுவனத்தால் இன்னமும் ஏற்றுக் கொள்ளப்படாத சீனாவின் சைனோஃபார்ம் தடுப்பூசியை இலங்கையர்களுக்குப் பயன்படுத்த வேண்டாம் என்று மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் லலந்த ரணசிங்க, சைனோஃபார்ம் தடுப்பூசியின் பாதுகாப்பு, செயற்திறன் மற்றும் நோய் எதிர்ப்புச் சக்தி குறித்து தீர்மானிப்பதற்கு அதனை உற்பத்தி செய்த நிறுவனம் போதுமான தரவுகளை தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகத்துக்கு வழங்கவில்லை. இவ்வாறானதொரு நிலையில் அந்தத் தடுப்பூசியை இலங்கையர்களுக்குப் பயன்படுத்தக் கூடாது.

சுவதேச மருத்துவ ஆராய்ச்சியாளரும், சுகாதாரக் கொள்கை நிறுவனத்தின் இயக்குநருமான மருத்துவர் ரவீந்திர, சைனோஃபார்ம் உற்பத்தியாளர்கள் தகவல்கள் வழங்காத நிலையில் அதனை உள்ளூர் பயன்பாட்டுக்கு அனுமதிக்கக் கூடாது - என்றார்.

கொழும்பு, கண்டி, புத்தளம் மற்றும் அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளில் உள்ள சீன நாட்டினருக்கு மட்டுமே தடுப்பூசிகள் வழங்கப்படும் என்று தொற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார். (ஒ.இ)

---

### ஏப்.21 தாக்குதல்

# தொடர்புடையவர்கள் மீது விரைவில் குற்றப்பத்திரம்

*நீதி அமைச்சர் தெரிவிப்பு*



கொழும்பு,ஏப்.2

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பாக, குற்றஞ்சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக, இரண்டு மாதங்களுக்குள் குற்றப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் என்று நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் உள்ளடக்கங்கள், சட்டமா அதிபரால் ஆராயப்பட்டு வருகின்றன.

தாக்குதல்களுடன் தொடர்பு பட்டிருந்தனர் எனக் குற்றஞ்சாட்டப்ப ட்டுள்ள நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சந்தேகநபர்களுக்கு எதிராக இரண்டு மாதங்களுக்குள் குற்றப்பத்திரங்கள் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

---

**முதலாம் பக்க தொடர்ச்சி...**

*சந்தேகத்துக்கிடமான...*

றில் சந்தேகத்துக்கு இடமான முறையில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் சந்தேகத்துக்கு இடமான முறையில் அகழ்வுப் பணிகள் நடைபெறுகின்றன என்று பொலிஸ் அவசர அழைப்புக்கு முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. அதையடுத்துப் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

புதையல் தோண்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா என்ற சந்தேகத்தில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. பொலிஸார் அந்த இடத்துக்குச் சென்றபோது சிவில் உடையில் படைத் தரப்பைச் சேர்ந்த சிலர் இருந்தனர் என்றும், எனினும் பொலிஸார் அங்கு சென்றபோது அவர்கள் அந்த இடத்தில் இருந்து அகன்றுவிட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, தனது சம்மதத்துடன் வீட்டின் திருத்த வேலைக்காகவே அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று வீட்டின் உரிமையாளர் பொலிஸாருக்குத் தெரிவித்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டன.

அதேவேளை, கிளிநொச்சிப் பகுதியில் சில நாள்களுக்கு முன்னர் புதையல் தோண்டும் நடவடிக்கையில் ஈடுபட்ட சிலர் கைது செய்யப்பட்டிருந்தனர். அதற்கும் இந்த அகழ்வு நடவடிக்கைக்கும் தொடர்பு இருக்கலாம் என்று அந்தப் பகுதி மக்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.(எ26)

---

# விலையேற்றத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்



கொழும்பு,ஏப்.2

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் அத்தியாவசியப் பொருள்களின் விலையேற்றம் என்பவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில், மருதானை சாஹிராக் கல்லூரிக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இதில் நாடாளுமன்ற உறுப்பினர்களான முஜிபுர் ரஹ்மான், மனோ கணேசன் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், கொழும்பு மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-இ)

---


## மரண அறிவித்தல்



**கணபதிப்பிள்ளை ரத்தினசிங்கம்**

யாழ் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், முதலாம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ரத்தினசிங்கம் அவர்கள் நேற்று (01.04.2021) வியாழக்கிழமை காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 673 6854 — தகவல்: குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

**திரு. வினாசித்தம்பி கணேசலிங்கம்**



**தோற்றம் 24.11.1963 — மறைவு 01.04.2021**

மீசாலை வடக்கை பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி கணேசலிங்கம் அவர்கள் நேற்று (01.04.2021) வியாழக்கிழமை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் அமரர்களான வினாசித்திம்பி அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், அமரர்களான சுப்பிரமணியம் மங்கையற்கரசி தம்பதியரின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், விதுரன் (வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன், A/L 2018, சப்ரகமுவ பல்கலைக்கழகம் கணினி விஞ்ஞான பீட முதலாம் வருட மாணவன்), யதுர்ணன் (வீரசிங்கம் மத்திய கல்லூரி A/L 2022, கணித பிரிவு) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவதவநாயகி (மட்டுவில்), சிவயோகலிங்கம் (லண்டன்), கோகிலவாணி (மீசாலை), பரமலிங்கம் (மீசாலை), புஸ்பராணி (அல்லாரை அரசினர் வித்தியாலய ஆசிரியர்) ஆகியோரின் சகோதரரும், மகேஸ்வரி (சைவபுலவர், கச்சாய் மகாவித்தியாலயம்- ஓய்வு நிலை ஆசிரியர்), மகேஸ்வரன் (சுவிஸ்), ராஜேஸ்வரி (அமரர்) ஆகியோரின் மைத்துனரும், மகேந்திரத்தின் சகலனும், பிரசாந்தன் (கல்மடு மகாவித்தியாலயம், ஆசிரியர்-வவுனியா), லோஜிதா (வவுனியா தேசிய கல்வியற் கல்லூரி மாணவ ஆசிரியர்) ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.04.2021) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
077 3451 797


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்காய் எண்ணெய் கொள்கலன்களுக்கு சீல்

## மக்கள் அச்சமடைய வேண்டாம் என்கிறது அரசு

**கொழும்பு,ஏப்.2**

**இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெய் கொள்கலன்களுக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது. அவை சந்தைகளுக்கு விநியோகிக்கப்படுவது நிறுத்தப் பட்டுள்ளது. எனவே மக்கள் தேங்காய் எண்ணெய் நுகர்வு குறித்து அச்சம் அடையத் தேவையில்லை என்று அரச தரப்பினர் தெரிவித்துள்ளனர்.**



இது தொடர்பில் அமைச்சரவை இணைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்ததாவது,

புற்றுநோயை ஏற்படுத்தும் மூலக்கூறுகள் அடங்கிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்துள்ளமை தொடர்பில் அரசு அவதானம் செலுத்தியுள்ளது. இது தொடர்பில் சுங்கத் திணைக்களம் விசாரணைகளை முன்னெடுத்துள்ளது. தவறிழைத்தவர்கள் எவரேனும் இனங் காணப்பட்டால் அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தேங்காய் எண்ணெய் மற்றும் மரக்கறி எண்ணெய் உள்ளிட்ட இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் சகல உணவுப் பொருள்களும் தொடர்ந்தும் கண் காணிக்கப்படுகின்றன. இவற்றின் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு அவற்றின் முடிவுகள் கிடைத்த பின்னரே, அவற்றை சந்தைகளுக்கு விடுவிக்க அனுமதியளிக்கப்படுகின்றது.

எமது அரசு ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பாம் எண்ணெய் எனப்படும் மரக் கறி எண்ணெய்க்குப் பதிலாக தேங்காய் எண்ணெய் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக மரக்கறி எண்ணெய்க்கான வரியை அதிகரித்து , தேங்காய் எண்ணெய்க்கான வரி குறைக்கப்பட்டது.

உலகளாவிய ரீதியில் மரக்கறி எண்ணெய் தொடர்பில் காணப்படும் சிக்கல் மற்றும் இலங்கையில் தயாரிக்கப்படுகின்ற தேங்காய் எண்ணெயின் உயர் தரம் என்பவற்றைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இதனைத் தவறாகத் திரிபுபடுத்த சிலர் முயற்சிக்கின்றனர் - என்றார். (க-இ)

# சியோன் தேவாலயத்தில் அமெரிக்க தூதரகத்தினர்

மட்டக்களப்பு,ஏப்.2

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்கு இலக்கான, சியோன் தேவாலயத்தை அமெரிக்கத் தூதரகத்தின் உயர் அதிகாரி அன்டோனி எப்.ரேன்சுலி தலைமையிலான குழுவினர் நேற்றுமுன்தினம் நேரில் சென்று பார்வை யிட்டனர்.

தேவாலயத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக, நிர்வாகத்தினரிடம் கேட்டறிந்த குழுவினர், தேவையான உதவிகளை வழங்குகின்றோம் என்றும் உறுதியளித்தனர்.

கடந்த நல்லாட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தேவாலயத்தின் மீள் கட்டுமானப் பணிகள் இடைநடுவில் நிறுத் தப்பட்டுள்ளதாக நிர்வாகத்தினர் எடுத்துக் கூறினர். (க-இ)

# பொலிஸாரின் தடுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டவர் உயிரிழப்பு

## விசேட குழு களத்தில்

கொழும்பு, ஏப்.2

பொலிஸாரின் தடுப்பிலிருந்து, நீதிமன்றம் வரை சென்று விடுவிக்கப்பட்ட நபர், திடீரென உயிரிழந்தமை தொடர்பில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்கர் தலைமையிலான விசேட பொலிஸ் குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கல்கிஸ்ஸ பகுதியில் கடந்த மாதம் 18 ஆம் திகதி போதை பொருளுடன் குறித்த நபர் கைது செய்யப் பட்டிருந்தார்.

அவர் கல்கிஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார். மறுநாள் கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

குற்றவாளிக்கு நீதிமன்றால் தண்டம் விதிக்கப்பட்டது. அன்றைய தினமே தண்டப் பணத்தைச் செலுத்திய நபர், நீதிமன்றத்திலிருந்து வெளியேறியுள்ளார்.

அவர் கடந்த மாதம் 21 ஆம் திகதி திடீரென சுகவீனமடைந்து களுபோவில மருத்துவமனையில் சேர்க் கப்பட்டார். அங்கு நான்கு நாள்கள் தொடர்ந்து சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

கடந்த மாதம் 25 ஆம் திகதி மருத்துவமனையிலிருந்து வெளியேறினார்.அவர் மீண்டும் சுகவீனமடைந்ததால் மீண்டும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் கடந்த செவ்வாய்க்கிழமை அவர் உயிரிழந்து விட்டார். அவரது இறப்பு, ஏதேனும் குற்றச் செயலின் காரணமாக இடம்பெற்றுள்ளதா என்பதைக் கண்டறிவதற்காக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் தலைமையில் விசேட பொலிஸ் குழு விசாரணைகளை நடத்தி வருகின்றது.

அதேவேளை பொலிஸாரின் தாக்குதலால் தான் தனது கணவன் உயிரிழந்துள்ளார் என்று அவரது மனைவி குற்றஞ்சாட்டியுள்ளார். (க-இ)

# செனட் சபை முறைமையே சிறுபான்மையினருக்கு தீர்வு

## சு.க.வலியுறுத்து

கொழும்பு, ஏப்.2

புதிய அரசமைப்பில் செனட் சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டும். அதன் மூலம் சிறுபான்மையின மக்களின் பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு, செனட் சபை ஊடாக தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும், தொழில் அமைச்சருமான நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பல்லின சமூகம் வாழும் ஒரு நாட்டில் பல பிரச்சினைகள் காணப்படுகின்றமை இயல்பானதொன்றாகும். 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற கொள்கையை அனைத்து இன மக்களும் எவ்வித வேறுபாடுகளும் இன்றிப் பின்பற்ற வேண்டும்.

சட்டத்தின் முன் எந்தத் தரப்பினருக்கும் சலுகை வழங்கப்படக்கூடாது. இனத்தை அடிப்படையாகக் கொண்டு அரச வரப்பிரசாதங்கள் வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும்.

பொதுச் சட்டத்தை அனைத்து இன மக்களும் மதித்து ஏற்றுக்கொள்ளும் சூழலை புதிய அரசமைப்பின் ஊடாக ஏற்படுத்த வேண்டும்.சட்டம் சிறந்த முறையில் தெளிவானதாகக் காணப்பட வேண்டும். இந்த விடயம் தொடர்பில் ஆராய்வதற்கு, நீதி மன்றக் கட்டமைப்புக்குள் விசேட பொறி முறை வகுக்கப்பட வேண்டும்.

மாகாண சபை முறைமையின் அதிகாரங்கள் குறைக் கப்பட்டு, உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும்.

சோல்பரி அரசமைப்பில், சிறுபான்மையின மக்களின் நலக் காப்பீடாக நாடாளுமன்றின் இரண்டாம் மன்றமாக செனட் சபை அறிமுகப்படுத்தப்பட்டது.

1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பில் இந்த மன்றம் நீக்க ப்பட்டது. ஆகவே மீண்டும் புதிய அரசமைப்பில் செனட் சபை முறைமையை அறிமுகப்படுத்த வேண்டும்.

தற்போது நடைமுறையில் உள்ள தேர்தல் முறைமை அரசியல் கட்சிகளுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் காணப்படுகிறது.

ஆகவே நாட்டுக்குப் பொருந்தும் வகையிலான தேர்தல் முறைமை அறிமுகம் செய்யப்பட வேண்டும் -என்றார். (க-இ)

# விவசாயத்தை மேம்படுத்த அலைவரிசை சேவை

கொழும்பு, ஏப்.2

'ஹரித' தொலைக்காட்சி அலை வரிசையின் முதலாவது சேவை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் தலைமையில் நேற்றுமுன்தினம் முற்பகல் கொழும்பு ஹுனுபிட்டிய கங்காராம விகாரையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதியால் "ஹரித" இணையத்தளம் (www.harithatv.com) மற்றும் கருப்பொருள் பாடல் என்பவையும் வெளியிட்டு வைக்கப் பட்டன.

விவசாயத் துறையில் இந்நாட்டின் கடந்தகால சுபீட்சத்தை மீண்டும் ஏற்படுத்தும் நோக்குடன் சமய பின்புலத்துடன் சிறந்ததோர் விவசாய பொருளாதாரத்துக்கு வழிகாட்டும் நோக்கில் இந்த அலைவரிசை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)


## மரண அறிவித்தல்

தோற்றம் 30 - 10 - 1938

மறைவு 01 - 04 - 2021



**பொன்னையா மனோன்மணி**

இக்கிராமனை கந்தரோடையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டபொன்னையா மனோன்மணி அவர்கள் 01.04.2021 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமு இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற பொன்னையாவின் அன்பு மனைவியும் அருணகிரிநாதனின் அன்புச் சகோதரியும் பிரதீபன், சுரேஷ்குமார், துஷ்யந்தி, ரஞ்சிநாத் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவதீஸ்வரன், மஞ்சு, வதனி ஆகியோரின் மாமியாரும், சரோன், சர்வின், டிலைக்ஷனா, கஜதீபன், தர்ஷ்வின், ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 905 8434, 077 219 5277

தகவல்: குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதம் இல்லாத நாடே எமது இலக்கு

## ஒன்றுபட அழைக்கிறது ஜே.வி.பி.

**கொழும்பு,ஏப்.2**

**இனவாதம் மற்றும் மதவாதம் இல்லாத நாட் டைக் கட்டியெழுப்புவதே எமது இலக்காகும். இந்த இலக்கை அடைவதற்கு எதிர்காலத்தில் அனை வரும் எம்முடன் கைகோர்க்க வேண்டும் இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய அமைப்பா ளரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான விமல் ரத்நாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.**



அக்கரைப்பற்று மெங்கோ காடன் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ் வில் அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டில் சிறுபான்மைச் சமூகம் நசுக்கப்படுவதை நாம் கண் கூடா கப் பார்க்கின்றோம்.

ஜனாதிபதியாக கோத்தாபய ராஜ பக்ச தெரிவு செய்யப்பட்டதன் பின் னர் நாட்டின் பொருளாதாரத்தில் அபிவிருத்தி ஏற்படுவதோடு, இன ஒற்றுமையும் ஏற்படும் என்றும் எதிர்பார்த்தோம். அவை தற் போது நடைமுறையில் இல்லாமை யால் நாட்டில் இனவாதம் மற்றும் மதவாதம் ஆகியவை காணப் படுகின்றன. அத்தியாவசியப் பொருள்களுக்கான விலைவாசி அதிகரித்துக் காணப்படுகின்றது. வரிகளும் நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றன.

இதனால் மக்கள் பல இன்னல் களைச் சுமந்தவர்களாக வாழ் கின்றனர். தற்போதைய ஆட்சி தொடர்பாக மக்கள் அவதானமாக இருக்க வேண்டும்.

இந்த அரசு இனவாதத்தைப் பரப் பியே ஆட்சிக்கு வந்தது.

நாட்டின் பொருளாதாரத்தில் அபி விருத்தி ஏற்படாமல், அட்டூழியங் களும் அநியாயங்களுமே அதிக ரித்துச் செல்கின்றன. இதற்கான நிரந்தரத் தீர்வு காணப்படாத வரை இவை தொடர்ந்து கொண்டே செல் லும். -என்றார். (க-இ)

## ஆட்சியைத் தக்க வைக்க மக்களை ஏமாற்றும் அரசு

### முஜிபுர் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.2

உலக நாடுகளுடன் இணைந்து பயணிப்பதில் இலங்கை அரசு தோல்வியடைந்துள்ளது. இந்த விடயத்திலும் அரசியல் கருத்துக்களைக் கூறி, போலியான விடயங்களால் மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றது. ஆட்சியைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவே இந்த நாடகம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசிடம் இராஜதந்திர அணுகுமுறைகள் இன் மையால் சர்வதேசத்தின் மத்தியில் இலங்கைக் குக் கிட்டியிருந்த நற்பெயருக்கு இழுக்கு ஏற்பட் டுள்ளது.

இதன் காரணமாக தற்போதைய அரசைப் போன்று சர்வாதிகாரப் போக்குடைய சில நாடுகள் மாத்திரமே இலங்கையுடன் இணைந்து செயற் படுகின்றன. ஏனைய சகல நாடுகளும் எம்மை விட்டு விலகியுள்ளன.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான பிரேர ணையை வெற்றிகொள்ள முடியாமல் போனமை அரசின் பலவீனமாகும்.

இந்தியா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட இலங்கை யின் நட்பு நாடுகள் கூட இலங்கைக்கு ஆதரவாக வாக்களிக்கவில்லை.

நாம் உலக நாடுகளுடன் இணைந்து முன் னோக்கிச் செல்லப் போகின்றோமா அல்லது தென் ஆபிரிக்காவைப் போன்று பழமைவாத ஆட்சியை நோக்கி செல்லப் போகின்றோமா? என்று சிந்திக்க வேண்டும். -என்றார். (க-இ)



## ஷானி அபேசேகர மீண்டும் மறியலில்

கொழும்பு,ஏப்.2

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பா ளர் ஷானி அபேசேகர உள்ளிட்ட மூவரை மீண்டும் விளக்கமறி யலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தர விட்டது.

இவர்கள் மீதான வழக்கு கம்பஹா நீதி மன்றில் நேற்றுமுன் தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

குறிப்பிட்ட மூவரை யும் எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்கு மாறு, நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஷானி அபேசேகர உள்ளிட்ட மூவரும் போலிச் சாட்சியங் களை உருவாக்கிய குற்றச்சாட்டில், கடந்த வருடம் ஜூலை மாதம் 31 ஆம் திகதி கைது செய்யப்பட்டு, விளக் கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். (க-இ)

## பொலிஸாருக்கு லஞ்சம் வழங்க முற்பட்டவர் கைது

கொழும்பு,ஏப்.2

பொலிஸாருக்கு லஞ்சம் வழங்க முயற்சித்த நபர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

பாணந்துறை போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகா ரிக்கு, அவர் லஞ்சம் வழங்க முயற் சித்துள்ளார்.

சாரதி அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தைச் செலுத்திய குற்றத் துக்காக சட்ட நடவடிக்கை எடுக்க முயற்சித்த போது, குறித்த நபர் ஆயிரம் ரூபாவை அவருக்கு லஞ் சமாக வழங்க முயற்சித்துள்ளார்.

அதனையடுத்து வாகன அனுமதிப் பத்திரமின்றி வாகனத்தைச் செலுத் தியமை, பொலிஸாருக்கு லஞ்சம் வழங்க முயற்சித்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களுக்காக அவர் கைது செய்யப்பட்டார் என்றும் அவர் தெரிவித்தார். (க-இ)

## விமலுக்கான தடை நீடிப்பு

கொழும்பு, ஏப். 2

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியு தீனை அவமதிக்கும் வகையில் கருத்து வெளியிட்ட, அமைச்சர் விமல் வீரவன் சவுக்கு விதிக்கப்பட்ட தடை மேலும் நீடிக் கப்பட்டுள்ளது.

ரிஷாட் பதியுதீன் தாக்கல் செய்த மனு மீதான விசாரணை கொழும்பு மாவட்ட நீதிமன்றில், நீதிபதி அருண அலுத்க மகே முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இதன் போது எதிர்வரும் ஏப்ரல் 12 ஆம் திகதி வரை தடையை நீடித்து நீதிபதி உத்தரவு பிறப்பித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியு தீனுக்கு அபகீர்த்தி ஏற்படும் விதத்தில், பொய்யான மற்றும் வெறுக்கத்தக்க கருத்துக்களை வெளியிடுவதற்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்த கருத்துக்கள் தனது நற்பெயருக்கு களங் கம் விளைவித்துள்ளன என்று ரிஷாட் பதியுதீன் கடந்த மார்ச் மாதம் 9 ஆம் திகதி மனு தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)

### மாகாணத் தேர்தலை

## கூட்டணியாகவே எதிர்கொள்வோம்

கொழும்பு. ஏப். 2



சிறிலங்கா சுதந்திர க்கட்சி மற்றும் பொது ஜன பெரமுன கூட் டணியாகவே எதிர்வ ரும் மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள் வோம். இவ்வாறு காணி விவகார அமைச்சர் சந் திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்குப் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

'மாகாணசபைத் தேர்தலை தள்ளிப்போடவேண்டிய தேவை எமக்குக் கிடையாது. நாம் கூட்டணியாக தேர் தலை எதிர்கொள்ளவே விரும்புகின்றோம்.

சுதந்திரக் கட்சி எம்முடன் இணைந்து போட்டியிடு வதா அல்லது தனி வழி செல்வதா என்பது குறித்து அவர்களே தீர்மானிப்பர்' -என்றார். (ஒ-இ)

## லெபனானிலிருந்து 177 பேர் நாட்டுக்கு

கொழும்பு,ஏப்.2

லெபனானில் வேலைவாய்ப்புக்காகச் சென்று, பல் வேறு இடர்பாடுகளை எதிர்கொண்ட 177 இலங்கை யர்கள் நேற்று நாடு திரும்பினர்.

இவர்கள் நேற்று அதிகாலை 3.45 மணிக்கு சிறப்பு விமானத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலை யத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் அனைவரும் இராணுவத்தினரால் தனிமைப் படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்டனர். (க-இ)

## ஒரு கோடி ரூபா பெறுமதியான ஹெரோய்ன் மீட்பு

கொழும்பு,ஏப்.2

வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான, 1 கிலோ 78 கிராம் நிறையுடைய ஹெரோய்ன் பொதிகள் கைப்பற்றப் பட்டன. குற்றப் புலனாய்வுப் பிரிவு நடத் திய சோதனையில், மருதானை லொக் கேட் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் ஹெரோய்ன் பொதி கள் கைப்பற்றப்பட்டன. ஹெரோய்ன் பொதிகள் மருதானை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசா ரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொன்னாலை சந்தையில் இனி வெளிக்கடலுணவுகள் இல்லை!

## வியாபாரிகளுக்கு விரைவில் மாற்று ஏற்பாடு

பொன்னாலை, ஏப்ரல் 2

**பொன்னாலைக் கடலில் பிடிக்கப்படும் கடலுணவுகளை மாத்திரம் பொன்னாலைச் சந்தையில் விற்பனை செய்வது எனவும், மேற்படி சந்தை வளாகத்தில் இதுவரை கடலுணவுகளை விற்பனை செய்து வந்த வியாபாரிகளுக்கு மாற்று ஒழுங்கு செய்து கொடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

வலி.மேற்கு பிரதேச சபை செயலாளர், பொன்னாலை வட்டார உறுப்பினர் ந.பொன்ராசா, உறுப்பினர் து.சுஜிந்தன், கடற்றொழில் பரிசோதகர், கிராம அலுவலர் உள்ளிட்டோர் கடந்த செவ்வாய்க்கிழமை தொழிலாளர்கள் மற்றும் வியாபாரிகளுடன் நடத்திய கலந்துரையாடலில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

பொன்னாலை இறங்குதுறையில் வடக்கு மாகாண சபை நிதியில் அமைக்கப்பட்ட சந்தை மற்றும் சந்தை வளாகத்தில் அண்மைக் காலமாக மன்னார் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தின் ஏனைய இடங்களில் கொள்வனவு செய்யப்பட்ட கடலுணவுகள் விற்பனை செய்யப்பட்டு வந்தன.

ஆரம்பத்தில் சில வியாபாரிகள் மாத்திரம் இவ்வாறான வியாபார நடவடிக்கையை மேற்கொண்டுவந்த போதிலும் தற்போது அவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதனால், பரம்பரை பரம்பரையாக இப்பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள், தங்களால் பிடிக்கப்படும் கடலுணவுகளை உரிய விலைக்கு சந்தைப்படுத்த முடியவில்லை என தெரிவித்திருந்தனர்.

இந்த நிலையில் குறித்த கலந்துரையாடலின்போது சந்தையில் இனிமேல் வெளியிடத்து கடலுணவுகளை விற்பனை செய்வதில்லை எனவும், பொன்னாலைக் கடலில் பிடிக்கப்படும் கடலுணவுகளை மாத்திரம் விற்பனை செய்வது எனவும் முடிவெடுக்கப்பட்டது. (ஐ)



## சாவ. பொதுச் சந்தையில் எழுமாற்றுப் பரிசோதனை

சாவகச்சேரி, ஏப்.2

சாவகச்சேரி பொதுச்சந்தை வியாபாரிகளில் ஒரு தொகுதியினருக்கான எழுமாற்றுப் பி.சி.ஆர் பரிசோதனை கடந்த செவ்வாய்க்கிழமை பொதுச்சந்தை வளாகத்தில் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டது.

சாவகச்சேரி நகரசபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தப் பரிசோதனையில் 138 வியாபாரிகளின் மாதிரிகள் பெறப்பட்டு ஆய்வுக்காக அனுப்பப்பட்டன.

ஏனைய தொகுதியினருக்கான பரிசோதனை விரைவில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# யாழ். நகரம் முடக்கப்படின் அரச அதிகாரிகளே பொறுப்பு

## மக்கள் எழுச்சிக் கட்சி விசனம்

யாழ்ப்பாணம்,ஏப்.2

எந்தவித திட்டமிடலும் இல்லாமல் யாழ்ப்பாணம் நகரம் முடக்கப்படுமாயின், அதனால் மக்களுக்கு ஏற்படும் நஷ்டத்துக்கு மாவட்டச் செயலர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோரே பொறுப்புக் கூற வேண்டும் என்று இலங்கை மக்கள் எழுச்சிக் கட்சியின் தலைவர் அருள் ஜெயந்திரன் தெரிவித்தார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

அதிகாரத்தில் உள்ளவர்கள் நடவடிக்கை எடுக்கும் போது, மக்கள் தொடர்பில் அக்கறை எடுக்க வேண்டும். இல்லாதுவிடில் பதவியை விட்டு வெளியேற வேண்டும்.

மண், பெண், பொன் ஆசை போன்று பலருக்குப் பதவி மேலும் ஆசை உண்டு. அது தவறில்லை, ஆனால் சிலர் பதவியில் இருந்து கொண்டு கடமைகளைச் சரிவரச் செய்வதற்குத் தவறுகின்றனர்.

தற்போது கொரோனாத் தொற்றால் உலகம் முடங்கி விட்டதா? இல்லையெனில், நகரப் பகுதியை முடக்க வேண்டிய தேவை ஏன்?. முடக்கும் பிரதேசத்தில் மக்கள் படும் கஷ்டங்களை இவர்கள் கவனத்தில் எடுப்பதில்லை. அந்த மக்களுக்கு நிவாரணம் கூட வழங்க முடியாமல், பிரதேசங்களை முடக்குவது எந்தவிதத்தில் நியாயமாகும். அரச உத்தியோகத்தர்களுக்கு அதிகாரம் இருப்பதால் மக்களை இவ்வாறு வஞ்சிக்க முடியுமா? -என்றார். (க-இ)



## வாகன விபத்தில் இளைஞர் காயம்

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ் செம்மணி வீதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞர் ஒருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சாவகச்சேரியில் இருந்து யாழ் நோக்கி வருகை தந்த கப் ரக வாகனமும் நல்லூரில் இருந்து வந்த மோட்டார் சைக்கிளும் மோதுண்டதில் இவ் விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் மோட்டார் சைக்கிள் பலத்த சேதத்துக்குள்ளானதுடன், அதைச் செலுத்தி வந்த இளைஞரே காயமடைந்துள்ளார். (வ-113)



## சாப்பாட்டு கடை ஊழியர்களுக்கு நெருப்புக்காய்ச்சல் தடுப்பு மருந்து

பருத்தித்துறை, ஏப் 2

பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துக்குட்பட்ட உணவு நிலையங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு நெருப்புக்காய்ச்சல் தடுப்பு மருந்து பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு ரீதியாக ஏற்பட்டு வருகின்றது. மாசடைந்த உணவு, நீர் மூலம் பரவக்கூடிய நெருப்புக்காய்ச்சல் (தைபோயிட்) எனும் தொற்று நோயானது அது தொற்றியுள்ளவர்களால் ஏனையோருக்கு கடத்தப்படக்கூடியது. உணவு கையாளுபவர் இத்தொற்றுக்குள்ளானால் பல நுகர்வோருக்கு இதனால் பாதிப்பு ஏற்படும். இதனைக் கருத்திற்கொண்டு இந்தத் தடுப்பூசி வழங்கப்படுகிறது. (வ-9)

## வலி, தென்மேற்கில் கண் சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஏப்.2

தந்தை செல்வாவின் ஞாபகார்த்தமாக வலி. தென்மேற்கு மக்களுக்கு இலவச கண் சிகிச்சை முகாம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பண்டத்தரிப்பு வை.எம்.சீ.ஏ. மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

இதன்போது இலவச கண்பரிசோதனையும், பரிசோதனையின் பின்னர் தேவையானவர்களுக்கு இலவச கண்ணாடியும் வழங்கப்படவுள்ளன. கொவிட்-19 சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி கண் சிகிச்சை தேவைப்படும் அனைவரும் இதில் கலந்துகொள்ளுமாறு வலி.தென்மேற்கு தந்தை செல்வா அறக்கட்டளை நிதிய ஸ்தாபகர் கணபதிப்பிள்ளை தலையரட்ணம் வேண்டுகோள்விடுத்துள்ளார். இப் பரிசோதனை தொடர்பில் கிராம மட்டத்தில் பணிபுரியும் கிராம அலுவலர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் சனசமூக பிரதிநிதிகள் ஆகியோர் இணைந்து உங்கள் பிரதேசங்களில் கண் பிரச்சினையால் அவதிப்படும் மக்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார். (ற-50)




## வடக்கு மாணவர்கள் இருவருக்கு விருது!

யாழ்ப்பாணம், ஏப்.2

கொழும்பு சங்கரில்லா விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற தேசிய புத்தாக்க செயற்றிட்டப் போட்டியில் பாடசாலைப் பிரிவில் சிறந்த ஆக்கத்தை முன்வைத்தமைக்காக வடக்கு மாகாணத்தில் இரு மாணவர்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த மதுரா அருந்தவம் மற்றும் யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த முருகதாஸ் பிரதாபன் ஆகிய இருவருமே இவ்வாறு கௌரவிக்கப்பட்டுள்ளனர். (ற-இ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலி.வடக்கில்

# விசேட அதிரடிப்படையால் வெடிபொருள்கள் மீட்பு!

**யாழ்ப்பாணம், ஏப். 2**

**யாழ். வலிகாமம் வடக்கில் இரு இடங்களில் பெருமளவு வெடிபொருள்கள் விசேட அதிரடிப்படையினரால் நேற்று மீட்கப்பட்டன.**



பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் வலி.வடக்கில் காங்கேசன்துறை காற்றடைப்பு வீதி மற்றும் தெல்லிப்பழை சூலாம்பதி வீதி ஆகிய இரு இடங்களிலிருந்து வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

தெல்லிப்பழை சூலாம்பதி வீதியில் மண்ணில் புதைக்கப்பட்டிருந்த மர்மப் பொருள் ஒன்று வெடிபொருள் என அடையாளம் காணப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை காற்றடைப்பு வீதியில் காணி துப்புரவு பணியின்போது பெட்டியில் அடைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி வெடிபொருள்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது குறித்து விசேட அதிரடிப்படையினருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்துக்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் வெடிபொருள்களை மீட்டுள்ளனர். (ற-20)



வவுனியா இறம்பைக்குளம் அருள்மிகு ஸ்ரீ கருமாரி நாகபூசணி அம்பாள் ஆலயத்தின் கலசம் பிரதிஷ்டை செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது இத்துடன் நாகேஸ்வரர் நாகேஸ்வரி அம்பாளின் நவநாகங்களுக்குரிய கண்கள் திறக்கப்பட்டு புதிதாக அமைக்கப்பட்ட தீர்த்தக்கேணியில் பிரதிஷ்டை செய்யப்பட்டதுடன், தீப பூசைகளும் இடம்பெற்றன. (ய-110)

## குடமுழுக்கு

சாவகச்சேரி, ஏப். 2

மட்டுவில் வடக்கு சந்திரபுரம் ஸ்ரீ பத்ரகாளி கோயில் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆஞ்சநேயர் மற்றும் உத்தம காளி ஆகிய கோயில்களின் குடமுழுக்கு இன்றையதினம் காலை 8.00 மணிக்கு நடைபெறும். (ய-131,9)



## யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவ சங்கங்கள் ஒன்றிணைப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன. இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதை முன்னிட்டு யாழ் மறைமாவட்ட ஆயரும் கல்லூரி முகாமையாளருமான யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் தலைமையில் கல்லூரி சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

அதைத் தொடர்ந்து "சூம்" செயலியூடாக உலகெங்கிலும் உள்ள பழைய மாணவர் சங்கங்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் பழைய மாணவர் சங்கங்களின் ஒன்றிணைப்பு இடம்பெற்றது. (வ-இ)

## வர்த்தக நிலையத்தில் புகுந்து இளைஞர் குழு அடாவடி

வவுனியா, ஏப்.2

இளைஞர் குழு ஒன்று வர்த்தக நிலையத்துக்குள் புகுந்து கைகலப்பில் ஈடுபட்ட சம்பவம் ஒன்று வவுனியா வைரவபுளியங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. சம்பவத்தில் காயமடைந்த இருவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த பகுதியில் உள்ள மதுபானசாலையில் மது அருந்தி விட்டு வந்த இளைஞர் குழுவொன்று மதுபானசாலைக்கு முன்பாக இருந்த வர்த்தக நிலையத்துக்குள் புகுந்து அதன் உரிமையாளர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. மேலும், அருகில் இருந்த வர்த்தக நிலையங்களிலும் வீதியிலும் நின்றோரையும் அச்சுறுத்தியுள்ளது. இதன்போது அப்பகுதியில் ஏற்பட்ட அடிதடி மற்றும் கைகலப்பில் இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (வ-110)

## நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி

இளவாலை, ஏப்.2

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய த்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழர் பாரம்பரியங்களைப் பறை சாற்றும் வகையில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் போட்டி வட்டுக்கோட்டை சவாரித்திடலில் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் 1 மணிக்கு இடம்பெறவுள்ளது.

பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் 5 பிரிவுகளாக இப்போட்டி நடத்தப்படவுள்ளது. இதில் ஒவ்வொரு பிரிவிலும் முதலிடம் பெறும் வெற்றியாளருக்கு துவிச்சக்கர வண்டியும், 2ஆம், 3ஆம், 4ஆம் இடங்களை பெறும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப் படவுள்ளன. (வ-222)

## புற்றுநோயாளிகள் நாளாந்தம் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 02

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கின்றது. இது தொடர்பில் பரிசோதனைகளை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

ஒரு வருடத்தில் 30 ஆயிரம் புற்றுநோயாளிகள் அடையாளம் காணப்படுகின்றனர். எனினும் அவர்களில் ஆயிரத்து 600 நோயாளிகள் மட்டுமே சிகிச்சை பெறுகின்றனர். நாட்டு மக்கள் புற்றுநோய் பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காக வெளிநாடு செல்வது குறைவு. புற்றுநோய் நோயாளி ஒருவருக்கு இந்தியாவில் இருந்து மருந்துகளை இறக்குமதி செய்வதற்கு, 45 ஆயிரம் ரூபா செலவு செய்யப்படுகிறது. இந்த மருந்து உள்நாட்டில் தயாரிக்கப்பட்டால் 14 ஆயிரம் ரூபா மட்டுமே செலவாகும். எனவே செலவைக் குறைக்கவும், அவற்றை இறக்குமதி செய்யும் போது ஏற்படும் செயற்திறனைப் பாதுகாக்கவும் கதிரியக்க மருந்து மையத்தை நாட்டில் நிறுவ அரசு முடிவு செய்துள்ளது. புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிவதற்கான ஒரு பொறிமுறையை செயல்படுத்தவும் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது – என்றார். (க-இ)

## ரஞ்சனின் மனு: ஏப்ரல் 5 தீர்ப்பு

கொழும்பு.ஏப்.2

நாடாளுமன்ற உறுப்புரிமை ரத்துச்செய்யப்படுவதைத் தடுக்கும் வகையில் எழுத்தாணை பிறப்பிக்குமாறு, நாடாமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க முன்வைத்துள்ள ரிட் மனுவை விசாரணைக்கு ஏற்பதா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 5 ஆம் திகதி தீர்ப்பு அறிவிக்கப்படும் என்று மேன் முறையீட்டு நீதிமன்று அறிவித்துள்ளது.

ரிட் மனு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன்போது தீர்ப்பு இன்னும் தயாராகவில்லை என்று மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி அர்ஜுன ஒபேசேகர மற்றும் மாயா துன்னே கொரேயா ஆகியோர் அடங்கிய குழாம் மன்றில் தெரிவித்தது.

தீர்ப்பு 5 ஆம் திகதி அறிவிக்கப்படும். அத்துடன் ரஞ்சனின் நாடாளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் நடவடிக்கை எடுக்க விதிக்கப்பட்ட இடைக்கால தடை எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது என்றும் குழாம் அறிவித்தது. (க-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஓட்டிசம்!

## தரமான பராமரிப்பால் தவிர்க்கலாம்



■ கலாநிதி க.கஜவிந்தன்
சிரேஸ்ட உளவியல் விரிவுரையாளர்
மெய்யியல் உளவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஓட்டிசம் எனும் மதியிறுக்க குறைபாடு எதனால் ஏற்படுகிறது என்பதை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை. பெண் குழந்தைகளை விட, ஆண் குழந்தைகள் தான் இக்குறைபாட்டால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பத்தாயிரம் குழந்தைகளில், 5 பேருக்கு இக்குறைபாடு ஏற்படுகிறது. பெற்றோர்கள் தொடங்கி மருத்துவர்கள் வரை ஓட்டிசம் குறித்த போதிய விழிப்புணர்வு இங்கு இல்லை. இதனை முன்னரே கண்டுபிடிப்பதனாலும், சரியான பயிற்சிகள் தருவதனாலும் நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

தகவல்களை பயன்படுத்திப் புரிந்து கொள்ளும் திறனை மூளை இழப்பது, பார்த்தல், கேட்டல் என உணரும் விஷயங்களை சரியாகப் பயன்படுத்த முடியாமல் போவதனால் மனிதர்களின் நடவடிக்கைகள் மாறிப்போவதே ஓட்டிசம். இது மூளை வளர்ச்சியில் ஏற்படும் குறைபாடாகும். மூளையின் முக்கிய செயல்பாடுகளாகிய பேச்சு திறன், சமுதாய தொடர்பு மற்றும் புலன் உணர்வு ஆகியவற்றை பாதிக்கும் நோய் இது.

### ஓட்டிசத்தின் தன்மைகள் :

இந்தக் குறைபாடு உள்ள குழந்தைகள் சமவயது உடைய குழந்தைகளுடன் நட்பை ஏற்படுத்திக் கொண்டு அதை மேலும் வளர்க்கும் வழிமுறைகளை அறியாதவர்களாக இருப்பார்கள்.

ஓட்டிசத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் தொடர்பு கொள்ளும் ஆற்றல்கள் இல்லாதவர்கள். இவர்களில் பெரும்பான்மையோர் பேசும் திறன் அற்றவர்கள். அப்படியே பேசும் திறன் இருந்து மொழி ஆற்றலும் வாய்க்கப் பெற்றவர்கள்கூட அவற்றை திறம்படக் கையாளும் வழி தெரியாதவர்களாகத் தான் இருப்பார்கள்.

சாதாரணமாக விளையாட்டின் மீது குழந்தைகளுக்கு இருக்கும் ஆர்வமும் கற்பனைத் திறனும் ஓட்டிசக் குழந்தைகளிடம் காணப்படுவதில்லை. தன்னை ஒரு மிருகமாகவோ, பறவையாகவோ பாவித்துக் கொண்டு அவற்றின் நடை, உடை பாவனைகளை விளையாட்டில் புகுத்தி மகிழும் கற்பனைத்திறன் இல்லாதவர்கள் இவர்கள்.

### அறிகுறிகள்

ஓட்டிசத்தை பின்வரும் அறிகுறிகளை வைத்து இனங்காணலாம். கண்ணோடு கண் நோக்காது பேசுதல், பழகுதல், கூப்பிட்ட குரலுக்கு செவி சாய்க்காது இருத்தல், ஒருவர் சொன்னதையே திரும்ப சொல்லுதல், தாமதமாகப் பேசத் தொடங்குதல், விளையாட்டில் நாட்டமின்றி இருத்தல், முகபாவம், சைகை மூலம் எண்ணங்களை உணர்த்தவோ, உணரவோ அறியாதிருத்தல், உறவை நீடிக்கச் செய்யும் வழிமுறைகளை அறியாதிருத்தல், யார் முகத்தையும் பார்க்காதிருத்தல், தனியாக இருப்பதை விரும்புதல், காது கேளாதது போல் இருத்தல், காரணமின்றி மற்றவர்களை தாக்குதல், அதிக வலியைத் தாங்கிக் கொள்ளுதல், கை, கால்களை வேகமாக அசைத்து வித்தியாசமாக சத்தமிடுதல், தன்னைத் தானே காயப்படுத்திக் கொள்ளுதல் என்பனவே அவை.



### தீர்வுகள்

எதனால் 'ஓட்டிசம்' ஏற்படுகிறது என்பது சரிவரத் தெரியவில்லை. தாய், தந்தையரின் பரம்பரையில் யாரேனும் பாதிக்கப்பட்டிருத்தல், மெக்னீசியம், துத்தநாகம் போன்ற கனிமச் சத்துகளின் குறைபாடு, 'செக்ரடின்' என்ற ஹார்மோன் குறைபாடு என பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் 'ஓட்டிசம்' ஒரு நோய் அல்ல என்பது மட்டும் உறுதி. எனவே அதற்கு மருந்து என்பது கிடையாது. ஆனால் ஆரம்பக்கட்டத்திலேயே அறிகுறிகளைக் கண்டறிந்து, பாதிக்கப்பட்டவர்கள் நடந்து கொள்ளும் முறையை முழுமையான பயிற்சிகள் மூலம் மாற்றி அமைத்து அவர்கள் வாழ்க்கையை முழுமையானதாகவும், அர்த்தமுள்ளதாகவும் செய்துகொள்ள உதவலாம். இதற்கான வழிமுறைகள் குறைபாடுகளின் தன்மையைப் பொறுத்தும், பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளைப் பொறுத்தும் வேறுபடும் என்பதை புரிந்து கொள்வது அவசியம். ஆரம்பத்திலேயே இந்தக் குறைபாட்டைக் கவனித்து ஆவன செய்வது பெரிதும் உதவும் என்றாலும் அதற்காக தாமதமாகச் செய்தால் பலன் இருக்கப்போவதில்லை என்று அசட்டையாகவும் இருந்து விடவும் கூடாது.

ஒரு விஷயத்தை திரும்பத்திரும்ப சொல்லிக் கொடுக்கும்போது, அவர்கள் அதைப் புரிந்து கொண்டு அதன்படி நடப்பர். மற்றக் குழந்தைகளை போல் இவர்களால், பாடங்களை படிக்க முடியாது. எனவே இவர்களை, சிறப்புப் பள்ளிகளில் சேர்த்து படிக்க வைக்கலாம். அங்கு பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மூலம் கற்றுக் கொடுப்பது எளிதாக இருக்கும்.

இந்த குழந்தைகளுக்கு பெற்றோரின் பங்கு முக்கியம். அவர்களால் தான், இந்த குழந்தைகளை இயல்பு வாழ்க்கைக்கு அழைத்துவர முடியும். இது ஒரு குறைபாடு என உணர்ந்து அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதை அவமானம் என கருதக் கூடாது. நாம் நம் குழந்தையை ஏற்று, அதற்குரிய முக்கியத்துவம் கொடுத்தால் தான், இச்சமூக மக்களும் மரியாதை கொடுக்க முன்வருவர். ஏற்கனவே சொன்னது போல், ஓட்டிசம் நோயால் பாதிக்கப்பட்ட சகல குழந்தைகளுக்கும், ஒரே மாதிரியான பிரச்சினை இருக்காது. எனவே, நம் குழந்தைக்கு என்ன விதமான குறைபாடு உள்ளது என முதலில் புரிந்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும், ஒவ்வொரு விதமான பிரச்சினை இருக்கும் என்பதால், சகல குழந்தைகளுக்கும் பொதுவான பயிற்சி முறைகளை வகுக்க முடியாது. ஒவ்வொரு குழந்தையையும் சரியாக புரிந்து கொண்டு, அதற்கேற்ப பயிற்சிகளை வடிவமைக்க வேண்டும். அவர்களது செயல்களால் கோபப்படாமல், அவர்களை புரிந்து கொண்டு, பொறுமையாக பயிற்சி அளிக்க வேண்டும். ஓட்டிசம் உள்ள ஒவ்வொரு நபருக்கும் தனித்தனி பலங்களும், பலவீனங்களும், சவால்களும் உள்ளன. சாதாரணமாக உள்ளவர்களைவிட ஓட்டிசம் உள்ளவர்கள் கற்றுக் கொள்ளும், சிந்திக்கும் மற்றும் சிக்கலைத் தீர்க்கும் வழிகள் மிகவும் கடுமையான சவால்களுக்கு உட்பட்டவர்களாயிருப்பர். சிலருக்கு அவர்களின் அன்றாட வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க ஆதரவு தேவைப்படலாம், மற்றவர்களுக்கு குறைந்த ஆத ரவு தேவைப்படலாம், சில சந்தர்ப்பங்களில், முற்றிலும் சுதந்திரமாக வாழக்கற்றுக் கொள்கிறார்கள்.



### சிகிச்சை முறைகள்

1. பிரயோக நடத்தைசார் பகுப்பாய்வு சிகிச்சை முறை
ஓட்டிசம் பாதிப்புள்ள குழந்தைகளுக்கான மிகச் சிறந்த, அதிக முன்னேற்றத்தை கொடுத்துள்ள சிகிச்சை முறை 'பிரயோக நடத்தைசார் பகுப்பாய்வு' முறை. இது உலகலாவிய ரீதியில் பயன்படுத்தப்படும் ஓட்டிசத்திற்கு சிறந்த ஓர் சிகிச்சை முறையாகும்.

2. புலன் ஒருங்கிணை சிகிச்சை
காட்சிகள், ஒலிகள் மற்றும் மணங்கள் போன்ற புலன் சார்ந்த விவரங்களைக் குழந்தைகள் முறையாகக் கையாள்வதற்கு இந்தச் சிகிச்சை உதவுகிறது. சில குழந்தைகள் ஒரு சில ஒலிகளைக் கேட்டு பயப்படும், அல்லது, பிறர் தன்னைத் தொடுவதற்கு அனுமதிக்கமடமாட்டார்கள், அதுபோன்ற குழந்தைகளுக்குப் புலன் ஒருங்கிணைப்புச் சிகிச்சை உதவலாம்.

3. பேச்சுச் சிகிச்சை

ஒரு குழந்தை தன்னுடைய தகவல் தொடர்பை மேம்படுத்திக்கொள்வதற்குப் பேச்சுச் சிகிச்சைகள் உதவுகின்றன. இந்தச் சிகிச்சைகளில், சைகை காட்டுதல், பட அட்டைகளைப் பயன்படுத்துதல்போன்ற மாற்று முறைகளைப் பயன்படுத்தி ஒரு குழந்தை தன்னுடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும் பிறருக்குத் தெரிவிப்பதற்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இவர்களுக்கு வழக்கமான கல்வி கற்று, மற்றவர்களை போல் வேலைக்கு செல்ல முடியாது என்பதால், இவர்களுக்கு சிறப்பு தொழில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தையல் கற்றுக் கொடுப்பது உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கலாம். இக்குழந்தைகள் சில அற்புதத் திறமைகளை கொண்டிருப்பர். அதைக் கண்டுபிடித்து ஊக்கப்படுத்த வேண்டும். மனதை ஒரு நிலைப்படுத்துவதற்கான பயிற்சிகளை அளிக்க வேண்டும். வண்ணம் தீட்டுவது, பேனா, பென்சில் கொடுத்து ஏதாவது கிறுக்க செய்வது என, பல்வேறு பயிற்சிகள் மூலம் அவர்களை அன்றாட வாழ்க்கைக்கு தயார் படுத்த வேண்டும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மியான்மர் இராணுவத்தின் நடவடிக்கை மூர்க்கமானது

## உரிய விலை கொடுப்பார்கள் என ஜோ பைடன் எச்சரிக்கை



**வொஷிங்டன், ஏப். 2**

**மியான்மரில் போராட்டத்தில் ஈடுபடும் மக்களுக்கு எதிராக இராணுவத்தால் மேற்கொள்ளப்படும் அடக்குமுறைகள் மிகவும் அபாயகரமாகவும் மூர்க்கத் தனமாகவும் உள்ளன. இதற்குத் தகுந்த விலையை மியான்மர் இராணுவம் கொடுக்கும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
மியான்மரில் இராணுவத்துக்கு எதிராகப் போராடும் மக்கள் எந்தக் காரணமும் இல்லாமல் கொல்லப்பட்டுள்ளனர். 600க்கும் மேற்பட்டவர்களை மியான்மர் இராணுவம் சுட்டுக் கொன்றுள்ளது.
இது அபத்தமானது. அபாயகரமானது. இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். மியான்மர் இராணுவம் இதற்குரிய விலையைக் கொடுக்கும் என்றார்.

**என்ன நடக்கிறது மியான்மரில்!**

மியான்மரில் ஆங் சான் சூச்சி தலைமையிலான அரசை கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதியன்று கலைத்த மியான்மர் இராணுவம், அந்த நாட்டில் இராணுவ ஆட்சியையும் அடுத்த ஓராண்டுக்கு அவசரகாலச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்தியுள்ளது.
இதையடுத்து இராணுவ ஆட்சியைத் திரும்பப் பெறுமாறும், கைது செய்து வீட்டுக் காவலிலும் சிறையிலும் வைக்கப்பட்டுள்ள சூச்சி தரப்பினரை விடுவித்து சூச்சி ஆட்சியமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியும் மியான்மரில் மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ளன.
இந்தப் போராட்டங்களை அடக்குவதற்காக இராணுவம் துப்பாக்கிச் சூடு நடத்துகின்றது. இந்தத் துப்பாக்கிச் சூட்டில் இதுவரை 600க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



# மீட்கப்படுகின்றது பஸ்ரா பெருநகர்!

பக்தாத், ஏப். 2
ஈராக்கின் பஸ்ரா பெருநகரம் பொதுமக்கள் பாவனைக்கு கையளிக்கப்படும் வகையில், அங்கு வெடிபொருள்கள் அகற்றப்பட்டு வருகின்றது.
ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக் சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு நீண்ட நாள்களாக ஆதிக்கம் செலுத்தியது. அந்த நாட்டின் பெருநகரங்கள் பலவும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் மாதக்கணக்கில் இருந்தன.
நில மீட்புப் போரின்போது பஸ்ரா நகரத்தில் ஏராளமான வெடிபொருள்கள் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் புதைக்கப்பட்டன. இந்த நிலையில் அவற்றை மீட்டு குறித்த பகுதியை மீண்டும் மக்களுக்கு கையளிக்கும் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது ஈராக் அரசு. (ம)

# மீண்டார் இம்ரான்!

இஸ்லாமபாத், ஏப். 2
கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டிருந்த பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், அதிலிருந்து மீண்டுள்ளார்.
பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கானுக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கடந்த மாதம் 20ஆம் திகதி உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து அவர் தனிமைப்படுத்தப்பட்டு தொடர்ந்து சிகிச்சை வழங்கப்பட்டது. இந்த நிலையில் சுமார் 9 நாள்கள் சிகிச்சையின் பின்னர் அவர் கொரோனாவில் இருந்து மீண்டுள்ளார் என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)





அமெரிக்காவின் முன்னாள் அதிபர் டொனால்ட் ட்ரம்பை, பௌத்த துறவியாகச் சித்திரிக்கும் சிலைகள் பல சீனத்துக்கு கலைஞர் ஒருவரால் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சிலைகள் தற்போது உலகெங்கும் ட்ரெண்டாகி வருகின்றனவாம். (ம)

# முப்படைத் தளபதிகள் ஒரே நாளில் விலகினர்

## பிரேசிலில் சம்பவம்

பிரேசிலியா, ஏப். 2
கொரோனாப் பெருந்தொற்றை அடுத்து ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாக பிரேசிலின் முப்படைத் தளபதிகள் நேற்றுமுன்தினம் தமது பதவியில் இருந்து விலகினர். இதையடுத்து பிரேசிலின் அதிபர் போல்சனாரோவுக்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளது.
கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த உலக நாடுகள் பலவும் ஊரங்கு உட்பட பல்வேறு நடவடிக்கைகளை இறுக்கமாகக் கையாண்டன. ஆனால் பிரேசில் அதிபர் போல்சனாரோ கொரோனாவைக் காய்ச்சலுடன் ஒப்பிட்டு கட்டுப்பாடுகளை விதிக்க மறுத்தார் இதனால் பிரேசிலில் கொரோனா விரைவாகப் பரவியது. தற்போது அமெரிக்காவுக்கு அடுத்த படியாக அதிகமான பாதிப்பை எதிர்கொண்ட நாடாக பிரேசில் உள்ளது.
இதையடுத்து பிரேசில் அதிபர் தனக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைச் சமாளிக்க இராணுவத்தினருக்கும் முப்படையினருக்கும் நெருக்கடி கொடுத்தார் என்று சொல்லப்படுகின்றது. இராணுவத்தின் உயர் அதிகாரியொருவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்து ஏற்கனவ பதவி விலகிய நிலையில், முப்படைத் தளபதிகள் ஒரே நாளில் (நேற்றுமுன்தினம்) பதவியில் இருந்து விலகியுள்ளனர்.
பிரேசில் அதிபரின் அளவுக்கு அதிகமான அழுத்தமே பதவி விலகக் காரணம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ம)



# விலங்குகளுக்கும் கொரோனாத் தடுப்பு

## உருவாக்கியது ரஷ்யா



மொஸ்கோ, ஏப். 2
கொரோனா வைரஸ் மனிதர்களுக்கு மட்டுமல்லாமல் விலங்குகளுக்கும் பரவியுள்ள நிலையில், விலங்குகளுக்கான கொரோனாத் தடுப்பூசியை உருவாக்கியுள்ளது ரஷ்யா.
கார்னிவாக்கோவ் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த தடுப்பூசியை ரஷ்யாவில் விலங்குகளின் ஆரோக்கியத்துக்கான மத்திய ஆணையம் உருவாக்கியுள்ளது. இதுகுறித்து ரஷ்ய அரசின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்ததாவது:
"கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடங்கிய கார்னிவாக்கோவ தடுப்பூசியின் மருத்துவ பரிசோதனைகளில் நாய்கள், பூனைகள், ஆர்க்டிக் நரிகள் உள்ளிட்ட விலங்குகளுக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்டன. இந்த சோதனை முடிவுகள் தடுப்பூசி பாதிப்பில்லாதது என்பதை உறுதி செய்ததோடு அது விலங்குகளுக்கு அதிக நோய் எதிர்ப்பு திறனை அளிக்கிறது என்பதையும் வெளிப்படுத்தியது" என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய நாள்

**மேடம்:** எதையும் கவனத்துடன் கையாளுங்கள். அதிகப் பேச்சு வேண்டாம். தனித்திறன் வெளிப்படும். அறிவுப் பூர்வமாக செயல் படுவீர்கள். அலுவலக பிரச்சினைகள் தீரும்.

**இடபம்:** புதிய வீடு, நிலம் வாங்குவதற்கான முயற்சிகள் கைகூடும். உங்கள் முன்யோசனை வாழ்வில் முன்னேறத் துணை செய்யும். அறிவுத்திறன் வெளிப்படும்.

**மிதுனம்:** தாய், உறவினரின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விலகியிருந்த நண்பர்கள் வலிய வந்து உதவி கேட்பர்.

**கடகம்:** சகோதரர்களுடன் இருந்த கருத்து மோதல்கள் நீங்கும். அதிக முயற்சியுடன் செயல்கள் முடியும். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப விஷயங்களில் கவனம் தேவை. மனம் தளர வேண்டாம்..

**சிம்மம்:** வீண் விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. உற்சாகம் பெருகும். தவறான விடங்களில் ஈடுபட வேண்டாம். மாலையில் நன்மை நிகழும். எதையும் சமாளித்துக் கொள்ளுங்கள்.

**கன்னி:** தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த கடன் கைக்கு வரும். உங்களின் செல்வாக்கு கூடும். விடாமுயற்சியால் வெற்றி பெறுவீர்கள். பிள்ளைகளால் ஏற்பட்டிருந்த கவலை தீரும்.

**துலாம்:** பணியில் உங்களது திறமையை நிரூபிப்பீர்கள். பிறரிடம் இருந்து பாராட்டுக் கிடைக்கும் என எதிர்பார்க்க வேண்டாம். புதுத்துறையில் ஈடுபாடு வந்து அதைக் கற்றுத் தேர்வீர்கள்.

**விருச்சிகம் :** வேலைப்பளு அதிகமாக இருந்தாலும் அதை சமாளிப்பீர்கள். புத்திசாலித்தனத்தை பயன்படுத்தி சிரமங்களை வெல்வீர்கள். சிறு தடைகளை எளிதாகக் கடப்பீர்கள்.

**தனுசு:** நன்கு முயன்று மேலதிகாரிகளின் நம்பிக்கையை பெறுவீர்கள். அலுவலகப் பணியில் குழப்பம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். உணர்ச்சிவசப்பட்டு அதிகம் பேச வேண்டாம்.

**மகரம்:** அலுவலகப் பணியில் நன்கு கவனம் செலுத்துவீர்கள். முயற்சியால் எண்ணம் நிறைவேறும். சுபச்செய்தி ஒன்று வரும். நேர்மையற்ற நண்பர்களைக் கருணையின்றி விலக்குங்கள்.

**கும்பம்:** முன்னேற்றத்துக்கு உறவினர் முட்டுக்கட்டை போடக்கூடும். இன்று எதிர்பாராத இடத்திலிருந்து திடீர் வரவு உண்டு. மனதுக்கு நெருங்கியவர்கள் உங்கள் மீது நம்பிக்கை கொள்வர்.

**மீனம்:** பணியாளர்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும்படி செயற்படுவீர்கள். பெற்றோரின் ஆரோக்கியம் முன்பைவிட நிம்மதியளிக்கும். ரேவதி: எதைச் செய்வதற்கும் முன்பு சிந்தியுங்கள்.

# தொலைபேசி பாவனையில் 2 ஆம் இடத்தில் இலங்கை

கொழும்பு, ஏப்.2

தென்னாசியாவிலே அதிகளவில் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் நாடுகளின் பட்டியலில் இலங்கை இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

சர்வதேச கையடக்கத் தொலைபேசி பயன்பாட்டாளர் அமைப்பின் புதிய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இலங்கையில் 60 வீதமானோர் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் 69 வீதமானோரும், நேபாளத்தில் 53 வீதமானோரும் பாகிஸ்தானில் 51 வீதமானோரும் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகிறார்கள்.

குறைந்த அளவில் கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்தும் நாடாக பங்களாதேஷ் உள்ளது.

அங்கு 41 வீதமானோர் மாத்திரமே கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகிறார்கள் எனத் தரவுகள் தெரிவிக்கின்றன. (ற-இ)

## தம்பதிகளிடையே மோதலெனில் பொலிஸார் இனித் தலையிடுவர்

*பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு*



கொழும்பு,ஏப்.2

திருமணமான தம்பதியினருக்கிடையே மோதல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதால், பொலிஸார் அவற்றில் தலையிட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் அண்மைக்காலமாக குடும்ப வன்முறைகள் அதிகரித்துள்ளன. அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியுள்ளது.

குறிப்பாக மலையகப் பகுதிகள் மற்றும் சுற்றியுள்ள தோட்டப் பகுதிகளில் மோதல் விவகாரங்கள் அதிகம் பதிவாகியுள்ளன. அண்மையில் அக்கரபத்தனையில் இடம்பெற்ற மோதலில், மனைவியைக் கொலை செய்த கணவன், சடலத்தை மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் வீசி தற்கொலை நாடகம் ஆடினார். இதேபோன்ற சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன.

அதனால் குடும்ப வன்முறை மற்றும் கொலைகளைக் குறைப்பதற்காக, தம்பதிகளுக்கு இடையில் தனிப்பட்ட சர்ச்சைகளைத் தீர்ப்பதற்குத் தலையீடு செய்வதற்கும், தம்பதிகளுக்கு இடையில் தனிப்பட்ட சர்ச்சைகளைத் தீர்க்க உதவுவதற்கும் பொலிஸ் சிறுவர்கள் மற்றும் பெண்கள் பணியகம் தலையீடு செய்யவுள்ளது. என்றார். (க-இ)

## பட்டப்பின்படிப்பு நிறுவனங்களை ஆராய உபகுழு

கொழும்பு,ஏப்.2

நாடு முழுவதிலும் உள்ள 9 பட்டப்பின்படிப்பு நிறுவனங்களின் நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பில் ஆராய்வதற்கு, உபகுழு நியமிக்கப்பட வேண்டும். அது தொடர்பில் ஆறு மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கோப் குழு, கல்வி மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தது. அரச பொறுப்பு முயற்சிகள் குழுவின் கலந்துரையாடலில் இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் நூலகருக்கு, மாதாந்த சம்பளத்துக்கு மேலதிகமாக 10 வீதக் கொடுப்பனவு பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் உரிய அனுமதி இன்றி வழங்கப்பட்டதையும் கோப் குழு சுட்டிக்காட்டியது.

அத்துடன் குறித்த நிறுவனம் ஆராய்ச்சித் திட்டங்கள் நான்குக்கு ஒப்பந்தம் செய்துள்ள போதும், ஆய்வு நடவடிக்கைகளைப் பூர்த்தி செய்ய முடியாமை மற்றும் 7 திட்டங்களின் பௌதீக ரீதியான முன்னேற்றம் குறித்த இறுதி அறிக்கை தயாரிக்கப்படாது இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டியது.

குறித்த நிறுவனத்தின் கணக்காய்வு நடவடிக்கைகளுக்குப் பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கணக்காய்வாளரை நம்பியிருப்பதை விட தனியான கணக்காய்வாளர் ஒருவரை நியமிக்குமாறும் கோப் குழு பரிந்துரைத்தது. (க.இ)

## தவக்கால சிந்தனை

### அனைத்துப் பலிகளுக்கும் சான்றான புனித வெள்ளி!

அனைத்துலக மக்களின் விடுதலைக்காய், அன்பே உருவான இறைமகன் அடிமையின் கோலம் பூண்டு செங்குருதி அபிஷேக கோலமாய், சிலுவைச் சுமைதாங்கி, கல்வாரி மலையேறி, இரும்பாணிகளால் சிலுவையுடன் பிணைக்கப்பட்டு, இரு கள்வரிடையே மும்மணி நேரம் தொங்கி தம்மையே ஆகுதியாக்கி மீட்பளித்த புனித நினைவேந்தலின் உச்சக் கட்டமாகிய புனித வெள்ளி இன்றாகும்.

மூன்று ஆண்டுகள் பகிரங்கப் பணிவாழ்வின் போது போதித்தவை, சாதித்தவை, நிரூபித்தவை அனைத்தையும் இரத்தினச் சுருக்கமாக ஏழு வாக்கியங்களில் எடுத்துரைத்து செயலில் காட்டி உலகமே விளந்து போற்றி சிந்திக்கும் வரலாற்றைப் படைத்தார் இயேசு.

"தந்தையே இவர்களை மன்னியும்' என்ற பரிந்துரையின் ஊடாக பகைவரை, அயலாரை சகோதரரை மன்னியுங்கள் என்று கூறியதை தாமே நிகழ்த்திக் காட்டுகிறார். குற்றமுணர்ந்து மனம்மாறி 'இயேசுவே நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற்கொள்ளும்' என்று வேண்டிய குற்றவாளிக்கு 'இன்று நீர் என்னோடு விண்ணகத்தில் இருப்பீர்' என்று தெரிவித்து மனமாற்றம் நிலைவாழ்வு தருமென உணர்த்துகின்றார்.

எமது நாளாந்த சிலுவைகளை பாரம் என்று நினைக்காது, தூரம் என்று சளைக்காது, அவமானம் என்று அலுக்காது, எம்மையே வெறுமையாக்கி தாழ்ச்சியுடன் கீழ்ப்படிந்து இறைசித்தம் நிறைவேற்றும் மனப்பாங்கை உருவாக்குவோம். பலவித அடிமைத்தனங்களால் கட்டுண்டு கிடக்கும் மக்களின் விடுதலைக்காக உழைக்க அதனால் வரும் துன்பங்களைத் தாங்க இயேசுவிடம் வரம்கேட்போம்.

**எஸ்.யேசுதாஸ்**
கொழும்புத்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராமிய வீடமைப்புத் திட்டத்துக்கு தென்மராட்சியில் 200 பேர் தெரிவு

**சாவகச்சேரி, ஏப்.2**

**தென்மராட்சிப் பிரதேசத்தில் கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள், தொழில் மேம்பாட்டு அமைச்சால் தலா 10 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்துக்கு 200 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.**

இதற்கென தெரிவு செய்யப்பட்ட தகைமையுடைய பயனாளிகளின் பெயர்ப் பட்டியல் பிரதேச செயலகத்திலும் அந்தந்தக் கிராம அலுவலர் பிரிவுகளிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

பயனாளிகள் பட்டியல் தெரிவு தொடர்பான ஆட்சேபனைகள் இருப்பின் ஏப்ரல் 6 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலமாக அறியத் தருமாறு பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

2009 ஆம் ஆண்டுக்கு முன்னர் திருமணமானவர்கள், இலங்கையில் எப்பாகத்திலும் சொந்த வீடு இல்லாதவர்கள், பிரதேசத்தில் சொந்தக் காணியில் மீளக் குடியேறியவர்கள், தமது காணிக்கு வலிதான ஆவணம் உள்ளவர்கள் மற்றும் மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் என்ற நிபந்தனை அடிப்படையிலேயே இவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ற-9)

வடக்கில் பரவலாக

# தந்தை செல்வாவின் பிறந்த தின நிகழ்வு

**யாழ்ப்பாணம்**

தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தின் தலைவரும், தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயருமான அ.ஜெபநேசன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் மேற்படி பிறந்த தினம் கொண்டாடப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர சபை உறுப்பினர் இ.ஆனோல்ட் மற்றும் தமிழரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



**மன்னார்**

மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக அமைந்துள்ள தந்தை செல்வாவின் திருவுருவச் சிலையடியில் மன்னார் மாவட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்களால் நேற்றுமுன்தினம் மாலை மேற்படி பிறந்த தின நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மன்னார் நகரசபை உப தவிசாளர் ஜான்சன் மற்றும் மன்னார் சட்டத்தரணி செல்வராஜா டினேஷன் ஆகியோர் தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மதிப்பளித்தனர்.



இதன்போது தமிழரசுக் கட்சியின் நகரசபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

**கிளிநொச்சி**

கிளிநொச்சி தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் மாலை இந்த நிகழ்வு இடம்பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதன்போது தந்தை செல்வாவின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு நினைவுகூரப்பட்டது. (ற-213,56,20,6,60)

# பிரிவுபசார நிகழ்வு

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் பட்டதாரிப் பயிலுநர்களாக பணியாற்றி நிரந்தர நியமனம் கிடைத்து வேறு இடங்களுக்குச் செல்லும் பட்டதாரிகளுக்கு அந்தந்த அலகுகளால் பிரிவுபசார நிகழ்வுகள் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்டன. கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் முதல் பயிலுநர்களாக நியமிக்கப்பட்டு 70 பட்டதாரிகள் பல்வேறு அலகுகளில் பணியாற்றி வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-9)

# நோய்களிலிருந்து மீள விசேட பூசை வழிபாடு

யாழ்ப்பாணம், ஏப்.2

நாட்டு மக்களும் உலகெங்கிலும் வாழும் மக்களும் கொரோனா தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீள்வதற்காக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இறை ஆசி வேண்டி நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு யாழ்ப்பாணம் தென்மராட்சி நுணாவில் மேற்கு பத்திரகாளி அம்பாள் வீரபத்திரர் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

விசேட பூசை வழிபாடுகளின் நிறைவில் ஆலயத்தின் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ தே.குருராஜசர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயணமும் இடம்பெறவுள்ளன. (ச)

# புதுவருட பொதியை பெறமுடியவில்லையே!

முல்லைத்தீவு மக்கள் பாதிப்பு

முல்லைத்தீவு, ஏப்.2

பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள சகல சதொச விற்பனை நிலையங்கள் ஊடாகவும் 12 அத்தியாவசிய பொருள்களை உள்ளடக்கிய ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரண பொதி விற்பனை செய்யப்படும் என அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவித்துள்ளார். இந்த நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரே ஒரு சதொச விற்பனை நிலையம் மட்டுமே உள்ளமையால் பொருள்களை கொள்வனவு செய்வதில் மக்கள் சிரமத்தை எதிர்கொண்டுள்ளனர்.

கரைதுறைப்பற்று பிரதேசத்தில் உள்ள ஹிச்சிராபுரம் பகுதியிலேயே முல்லைத்தீவு மாவட்டத்துக்கான சதொச உற்பத்தி நிலையம் அமைந்துள்ளது. இதனால் மாவட்டத்தில் ஏனைய பிரதேசங்களில் உள்ள மக்கள் குறைந்த விலையில் பொருள்களை கொள்வனவு செய்யமுடியாத நிலையில் உள்ளனர். கடந்த ஆண்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சதொச விற்பனை நிலையம் ஒன்று இயங்கிவந்த நிலையில் அது இந்த ஆண்டு தொடக்கத்திலிருந்து பூட்டப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள ஆறு பிரதேச செயலர் பிரிவுகளிலும் சதொச விற்பனை நிலையம் அமையப்பெற்றால் அத்தியாவசிய பொருள்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என மக்கள் தெரிவித்துள்ளார்கள். (வ-19)



# மாணவர்களுக்கு மரக்கன்றுகள்

கொடிகாமம், ஏப்.2

வன்னித் தமிழ் மக்கள் ஒன்றிய பசுமைப் புரட்சியின் தொடர்ச்சியான செயற்றிட்டம் நேற்று வியாழக்கிழமை முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கள்ளப்பாடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்றது. இதன்போது மாணவர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ற-159)



மாணவர்கள் மத்தியில் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் மனிதம் அமைப்பால் வாசிப்பு வட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இதன்படி, ஏழாவது வாசிப்பு வட்டம் சாவகச்சேரி, கெற்பேலி கிராமத்தில் அண்மையில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போது மாணவர்களுக்கு அறிந்திரன் சிறுவர் சஞ்சிகை அறிமுகப்படுத்தப்பட்டதுடன், விடுகதைப் போட்டிகள், சிறுவர் விளையாட்டுக்கள், வாசிப்பின் முக்கியத்துவம் மற்றும் வாசிப்பதால் கிடைக்கும் நன்மைகள் தொடர்பான கருத்துப்பகிர்வு என்பவையும் இடம்பெற்றன. (வ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ௨ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 14 - 03 - 1936

மறைவு 25 - 03 - 2019

### அமரர் செல்லையா இராசலிங்கம்

திதி : அபரபக்ஷ பஞ்சமி

எங்கள் நீங்கா நினைவலைகளில் எப்பொழுதும் எம்முடனே...

எங்கள் நீங்கா நினைவலைகளில்
எப்பொழுதும் எம்முடனே
தொடர்ந்து வருவீர் - என
நினைத்தோமே - ஆனால்
அனைத்தையும் பொய்யாக்கி
விட்டீரே! - நீங்கள்
எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே!
கண்மூடி திறக்கும் முன்னே
எங்களைக் கடந்து விட்டீரே!
இரண்டு ஆண்டுகள்
என்றும் எமக்கு நல்வழிகாட்டி - எம்முடன்
இணைந்திருப்பீர் என கனவுகள் கண்டோமே!
இடைநடுவில் எம்மை தவிக்கவிட்டு
ஏன் கடவுளே அழைத்து விட்டீரே!
இன்னொரு பிறவி உண்டென்றால்
அதிலும் இம் உறவாய்
நீங்கள் வர வேண்டும் கடவுளே!
இதனையே நாம் ஏங்குகின்றோம்.

புலவனார் வீதி,
கல்வியங்காடு.

குடும்பத்தினர்
021 223 0256

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 20 . 10 . 1976

இறப்பு 02 . 04 . 2020

### அமரர் திருமதி கோணேஸ்வரன் சிவகௌரி

காலம் இன்னும் இருக்கையிலே
காலன் அவன் முந்திவிட்டான்
ஓலம் இடும் பிள்ளைகளுக்கு
ஒளிந்து நீ சென்று விட்டாய்
கோலம் போல் இருந்த வாழ்வு
கொள்ளையிட்டுப் போன பின்னே
ஆல மரமொன்று அடியோடு
- சாய்ந்ததாய்
ஆடித்தான் போய்விட்டோம்
- வழியின்றி நாமே

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

## ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்



### தியாகராஜா இராதாகிருஷ்ணன் (கிருஷ்ணா)

பதுளையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கன்னாதிட்டி, வண்ணார் பண்ணை பெரியதம்பிரான் வீதி, இல.51ஐ வதிவிடங்களாகவும் கொண்ட தியாகராஜா இராதாகிருஷ்ணன் (கிருஷ்ணா) அவர்கள் நேற்று (01.04.2021) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் தியாகராஜா கமலாம்பிகை தம்பதியரின் அன்பு மகனும், கண்ணன், கல்யாணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவானி (மிதுனா), சிவபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P: 077 074 3492,
0777245965

தகவல்:
குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 03.10.1983

உதிர்வு 13.04.2020

அமரர்

### இராமராசா மயூரன் (மதன்)

(சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் – அச்செழு)

எங்கள் அன்பு தம்பியே
ஈரவிழிகளுடன் ஆண்டு ஒன்று ஆனாலும்
ஆறாது எம் துயரம்
கொடிய நோய் உன் உயிரை
பறித்ததுவோ எம்மிடமிருந்து
அழியாத துன்பத்தை தந்துவிட்டு
நெடுந்தூரம் சென்று விட்டாய்
எனி எப்போது உனைக்
காண்போம் இவ்வுலகில்
உன் ஆத்மா சாந்திபெற
இறைவனை வேண்டுகின்றோம்.

பாடசாலை வீதி,
சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி

சகோதரிகள்
மைத்துனர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் சட்டங்களை திருத்த நாடாளுமன்றத் தெரிவுக்குழு

கொழும்பு, ஏப். 2
தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறையின் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காணவும் தேவையான திருத்தங்களை பரிந்துரைக்கவும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்படவுள்ளது.

குறித்த தெரிவுக்குழுவை நியமிப்பதற்கான தீர்மானம் வரும் திங்கட்கிழமை நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒத்திவைப்பு நேரத்தில் அவைத் தலைவர் அமைச்சர் தினேஷ் குணவர்தன குறித்த தீர்மானத்தை சபையில் முன்வைப்பார் என்று நாடாளுமன்ற பொதுச்செயலாளர் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

15 உறுப்பினர்களைக் கொண்டதாக குறித்த தெரிவுக்குழு அமையும். சபாநாயகர் நியமித்த ஆறு மாதங்களுக்குள் குழுவின் பரிந்துரைகளை சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழு, தற்போதுள்ள தேர்தல் முறைமை மற்றும் அதன் கட்டமைப்பின் குறைபாடுகளை அடையாளம் காணவும், திருத்தங்களையும் பரிந்துரைகளையும் வழங்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

# மனித நேய விடயங்களில் மிகத் துணிச்சலானவர் ஆயர்!

## முன்னாள் எம்.பி. சரவணபவன் இரங்கல்

யாழ்ப்பாணம், ஏப். 2
மனிதநேயம் தொடர்பாக, ஓய்வுநிலை ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகையின் செயற்பாடுகள், அவர் கொண்ட நேர்மையும் துணிச்சலும் அவரைத் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மனித உரிமை மீறலுக்கு எதிரான செயற்பாட்டாளராக இனம் காண வைத்தது என்று இரங்கல் தெரிவித்துள்ளார், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இது குறித்து அவர் விடுத்த இரங்கல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:
வையத்துள் வாழ்வாங்கு வாழ்வான் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும். என்பது வள்ளுவன் வாக்கு. அப்படித் தமது வாழ்வை முழுமையாக வாழ்ந்து முடித்து, தம்மை முழுமையாக அடையாளப்படுத்தி மறைந்துள்ளார் மன்னார் மாவட்ட ஓய்வு நிலை ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை. ஆயர், தனது சேவைகளை மக்கள் தொண்டாகப் பெருமையுடன் ஏற்றுக் கொண்டதோடு அதனைத் தனது வாழ்வின் இலக்காகவும் ஆக்கிக் கொண்டவர். மனிதநேயம் தொடர்பான அவரது செயற்பாடுகளில் அவர் கொண்ட நேர்மை யும் துணிச்சலும் அவரைத் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மனித உரிமை மீறலுக்கு எதிரான செயற்பாட்டாளராக இனம் காணவைத்தது. போர்க்காலத்தில் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் மற்றும் மனிதஉரிமை மீறல் செயற்பாடுகளைச் சர்வதேசத்துக்கு வெளிப்படுத்த அவர் எடுத்த முயற்சிகள் துணிச்சலானவை மட்டுமல்ல பல சவால்களை அழுத்தங்களை அவர் எதிர்கொள்ளவும் வைத்தன. இருந்தும் எந்த வகையிலும் அவர் மக்களுக்கான தன் பணிகளை நிறுத்தியதே கிடையாது. இறுதி வரை அவர் எந்த அளவுக்குத் தன்னை ஒரு மனித நேயச் செயற்பாட்டாளராக நிலைநிறுத்திக் கொண்டாரோ அந்த அளவுக்குத் தமிழ்த் தேசிய உணர்வுள்ளவராகவும் இனம் காட்டிக் கொண்டார்.

அவரது மறைவு தமிழ் மக்களுக்கு ஒரு இறை தூதனை இழந்த துயரத்தைக் கொடுத்திருப்பது நிஜமே. - என்றுள்ளது. (த)


# 29 ஆம் ஆண்டு நினைவலைகள்

## சண்முகநாதன் ஸ்ரீராம் (மணாளன் டயஸ்)



தாயின் மடியில் 09.05.1972
ஆண்டவன் அடியில் 23.03.1992

அன்று உன்னை பத்து மாதம் உயிரில்
வைத்து சுமந்தேன்
இன்று உன்னைக் காணாமல்
ஒரு தாயாக உன் நினைவுகளை மனதில்
வைத்து சுமந்து வருகின்றேன் சுகமாக
எவ்வளவு தொலைவில் நீ
எங்களை விட்டுப் பிரிந்தாலும்
என்றுமே இவ் வையகம் உள்ளவரை
உன் நினைவும் எம்மோடு வாழும்
கண்களை மூடிப்பார்த்தாலும்
கண்களைத் திறந்தாலும்
கனவிலும் என் மகனே!
நான் எப்போதும் நினைப்பது
உன்னையடா.........

# 31 ஆம் நாள் நினைவலைகள்

யாழ்ப்பாணம் பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் மன்னார், தொல்புரம், லெபனான், ஜேர்மனை வசிப்பிடமாகவும் கனடா மார்க்கத்தில் வாழ்ந்து வந்தவருமான

## அமரர் பூபாலசிங்கம் சண்முகநாதன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த நினைவுநாள்



மலர்வு 28 . 07 . 1944
மகேசிடம் 14 . 02 . 1921

ஏன் இப்படி கவலையைத் தந்தீர்கள்
எங்களுக்கு சொல்லாமலே முடிவு
எடுத்துக்கொண்டீர்களா?
எங்கள் எல்லோரையும்
விட்டுச்செல்வதற்கு...

யாழ்ப்பாணம் தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியா, மதுரை, சென்னை, வலசரவாக்கத்தை வசிப்பிடமாகவும் ரொரன்ரோ கனடாவில் வாழ்ந்து வந்தவருமான

## சண்முகநாதன் ரகுராம்

அவர்களின் சிவப்பதப்பேறு நினைவுநாள்



மலர்வு 30 . 06 . 1979
உதிர்வு 24 . 02 . 2021

கண்ணீருக்கு மதிப்பு அதிகம் ஏனென்றால் கண்கள்
உலகத்தைக் காட்டும் கண்ணீர் உள்ளத்தைக் காட்டும்
உனது கண்களிலிருந்து வடிந்த கண்ணீர்தான்
உன்னைப் பார்த்த கடைசி நிமிடம் எங்களால்
ஆறவே முடியவில்லையடா
என்ன அப்படிப் பாவம் செய்தோம்?

இந்த இக்கட்டான சூழலிலும் அவனுக்கு நேரடியாக தங்கள் உதவிகளைச் செய்த அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் குடும்பத் தலைவனினதும் ஐந்தாவது திரி அணைந்த வேளையிலும் நல்லடக்க நிகழ்வில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் தாய்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலம் துயரத்தினைப் பகிர்ந்துகொண்டோருக்கும் மலர்வளையங்கள், மலர்மாலைகள், மாலைகள் சூட்டி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அப்பாவினதும் ரகுவினதும் நல்லடக்கத்தில் கொவிட் - 19 காரணமாக கலந்துகொள்ள முடியாமல் தவித்த அனைத்து உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தாய்நாட்டிலும் எங்களிடம் வந்து ஆறுதல் கூறிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எங்கள் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

அம்மா, மனைவி, மாமி, சகோதரர்கள், மைத்துனிகள், மைத்துனர்கள், மருமக்கள்.


## பசறை பஸ் விபத்து:
# சாரதியின் மோசடி அம்பலம்

பசறை லுணுகலப் பகுதியில் அண்மையில் இடம்பெற்ற கோரவிபத்தின் பின்புலத்தில், சாரதியின் மோசடியான செயல் வெளிக்கொணரப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான பஸ்ஸை செலுத்திச் சென்ற சாரதி, வேறொரு சாரதியின் அனுமதிப் பத்திரத்தை சில காலம் பயன்படுத்தி வந்துள்ளார். இது தொடர்பான தகவலை சிங்கள இணையத் தளமொன்று வெளியிட்டுள்ளது. குறித்த பஸ்ஸின் சாரதிக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்தக் கோரவிபத்தில் 15 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (க-இ)


**சேவை**
வயது போனவர்களை வீட்டிலிருந்து பராமரிப்பு செய்து தரப்படும் (ஆண்கள்)
தொடர்பு 077 613 7691

**வேலையாட்கள் தேவை**
யாழ்.நகரில் இயங்கும் மென்பான விநியோக நிறுவனமொன்றிற்கு
➤ கணக்காளர் (கணினி அறிவுள்ள பெண்கள்)
➤ விற்பனைப் பிரதிநிதிகள் (கணினி அறிவுள்ளவர்கள்)
➤ சாரதிகள்
➤ கூலியாட்கள் தேவை.
சனிக்கிழமை நேரில் சமூகமளிக்கவும்
தொடர்பு: 077 226 9914
077 022 7620, 021 221 2161


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதான மாடுகள் வெளிநாடுகளுக்கு

## புதிய சட்ட வரைவு தயாராகிறது

கொழும்பு,ஏப்.2
வயதான மாடுகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமி டப்பட்டுள்ளது. அதற்கான புதிய சட்ட வரைவைத் தயாரிப்பதற்கான பேச்சுக்கள், சட்டமா அதிபருடன் இடம்பெற்று வருகின்றன என்று புத்த சாசனம், மத விவகாரங்கள் மற்றும் கலாசார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்தன தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
மாடறுப்புக்கு எதிரான சட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும். இலங்கையில் மாடறுப்புக்கு எதிரான யோசனை, கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் அமைச்சரவையில் அனுமதிக்கப்பட்டது. அதற்கமைவாக தற்போது புதிய சட்ட வரைவு தயாரிக்கப்படுகின்றது.
அதனூடாக உள்நாட்டில் மாடுகள் அறுக்கப்படு வது தடுக்கப்படும். வெளி நாடுகளில் இருந்து மாட்டிறைச்சியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
பால் உற்பத்தியாளர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்கும் நோக்கிலேயே, உள்நாட்டில் மாடறுப்புக்குத் தடை விதிக்கப்படுகின்றது. மாடுகள் மற்றும் கன்றுகள் அறுக்கப்படுவதால், பால் உற்பத்தியாளர்கள் நட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.
அதேவேளை வயதான மாடுகள் தொடர்பில் எழும் பிரச்சினைகளுக் குத் தீர்வாக, அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமி டப்பட்டுள்ளது.
எனினும் இதனால் பாதிக்கப்படுபவர்களுக்குத் தீர்வு வழங்குவதற்கான உடன் திட்டம் எதுவும் முன்வைக்கப்பட வில்லை - என்றார்.

(க-இ)


# கேள்வி அறிவித்தல்

வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா

(PSDG-2021)

01. தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி வேலைகளிற்காக கோருகின்றார்.

02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03. கேள்வி பெறத்தகுதியுடையவராவதற்கு, சித்தி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் 04/2016(ii)ம் இலக்க 08.05.2019ம் திகதிய பொதுச்சுற்றறிக்கையின் பிரகாரம் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) வீதி வேலை செய்வதற்கான கீழே அட்டவணையில் காட்டப்பட்டபடி பொருத்தமான தரத்தில் பதிவினை மேற்கொண்டிருப்பதுடன் வடக்கு மாகாணத் திற்குள் செல்லுபடியான வியாபார/கம்பனி பதிவினையும் கொண்டிருத்தல் வேண்டும்

04. தேவையான தகமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக் குளம் வவுனியா** (தொலைபேசி: 0242225737,தொலைநகல்- 0242050067, மின்னஞ்சல் npvstps@yahoo.com) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் 16.04.2021 திகதி வரை மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணிவரை கேள்வி ஆவணத்தினை பார்வையிடலாம்.

06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணங்களை ஆங்கில மொழியில் **தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம், வவுனியா** எனும் இடத்தில் 01.04.2021 திகதி யிலிருந்து 16.04.2021 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டண மாக ரூபா 2000/= ( வரிகள் நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்பட வேண்டும்.

07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை, நேரியகுளம் வீதி, நெளுக்குளம் வவுனியா எனும் முகவரிக்கு 16.04.2021 ஆம் திகதி மாலை 14.30 மணிக்கு** முன்பதாகக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று நாட்கள் 16.09.2021) நாட்கள் வரையும் செல்லுபடியாகும்

09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ)மில்லியன் | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/43(5)/5.5/3-1/21 | நவ்வி உள்ளக வீதி நிர்மாணம் (கல்லிட்டு தாரிடல்) | 4.597 மில்லியன் | 03 மாதங்கள் | C8 & C7 வீதி வேலை | 46,000.00 | 16.09.2021 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்னோடிக் கூட்டம் 12.04.2021 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபைக் கட்டிடத்தில் நடைபெறும் ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,**
**நெளுக்குளம், வவுனியா.**
**01.04.2021**



# கண்ணீர் அஞ்சலி

யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை ஆசிரியை
**செல்வி சுதாமதி கனகரெத்தினம்**
அவர்களின் பாசமிகு தாயார்



## அமரர் கனகரெத்தினம் சொர்ணம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**பிரிவால் துயருறும்**
**ஆசிரியர் நலன்புரிக்கழகம்**
**யா/ யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை**



# மரண அறிவித்தல்



## திரு.தம்பிஜயா பரமேஸ்வரன் (BBA)

(ஓய்வு பெற்ற ஆசிரியர்,
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி)

மலர்வு 03.05.1947
உதிர்வு 01.04.2021

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா பரமேஸ்வரன் அவர்கள் நேற்று (01.04.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஜயா செல்லம்மா தம்பதியரின் மகனும், சிவேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயந்தன், திஷாந்தி, கஜராம், ஆகியோரின் அன்புத் தந்தையும், கமலேஸ்வரி, காலஞ்சென்ற கமலேஸ்வரன், நகுலேஸ்வரன், ரவீந்திரன், மற்றும் கமலநாதன், றஜனி, மனோகரன், பாஸ்கரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற ராசதுரை, ராசலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகனும், தெய்வேந்திரம், ராசேந்திரம், காலஞ்சென்ற யோகேந்திரன் மற்றும் ராஜேஸ்வரி, அனுசா ஆகியோரின் மைத்துனரும், சர்மினி, துஷாந், மகிழினி ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரபி, அக்ஷயன், வைஷ்ணவி, அஸ்வினி, காவிரி, காவிலி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இணுவிலில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (02.04.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணியளவில் காரைக்கால் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



# மரண அறிவித்தல்

தோற்றம்
12 . 07 . 1933



மறைவு
01 . 04 . 2021

## செல்வரத்தினம் சிவன்நேசன்

**(இளைப்பாறிய மின் பொறியியலாளர்-இலங்கை மின்சாரசபை, கூல் எயார்)**

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், "நிம்மதி" தேவாலய வீதி, சங்கானையை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சிவன்நேசன் அவர்கள் நேற்று (01.04.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பத்மராணி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் நாகரத்தினம் ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நிம்மதி கனகரத்தினம் ஞானரத்தினம் ஆகியோரின் அன்பு மருமகனும், சிவானி (லண்டன்), சிவாஜினி (லண்டன்), சிவாஞ்ஜன் (பிரதிப் பொது முகாமையாளர் உதவிச் சேவைகள்-இலங்கை வங்கி), சிவாஞ்சலி (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், R.கருணாகரன் (லண்டன்), A.கருணாகரன் (லண்டன்), ஜெயவதனி, R.இராமேஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், டினுஷன், ஜெனுஷன், பிரஷான், கிரிஷான், ராதுஷன், வர்ஷினி, விகேஷன், ரவுஷன், ரக்ஷா ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்ற சிலபாலன், சிவன்தாசன், காலஞ்சென்ற சிவன்ரூபன், சிவகாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**சிவாஞ்ஜன் (மகன்)**
**"நிம்மதி"**
**தேவாலய வீதி, சங்கானை.**
**021 225 0867, 077 766 7746**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியங்காடு...

இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வுகூடம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடம் என்பற்றில் நேற்று 778 பேரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

யாழ்ப்பாணம் மாநகர வர்த்தகர் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. நேற்றுமுன்தினம் கிடைத்த பி.சி.ஆர். முடிவுகளில் 7 பேரின் மாதிரிகள் முடிவெடுக்க முடியாத நிலையில் இருந்தன. அவர்களுக்கு நேற்று மீண்டும் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது. அவர்களில் ஒருவருக்கே தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் 6 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. தாதிய உத்தியோகத்தர் ஒருவருக்கும், தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த மூவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கொரோனாத் தொற்று அறிகுறிகளுடன் மருத்துவமனை வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த இருவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவர்களுக்கு தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

திருநெல்வேலிச் சந்தையில் பணியாற்றும், நல்லூர் பிரதேச சபை ஊழியர்கள் மூவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. திருநெல்வேலிச் சந்தை வியாபாரி ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த இருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் ஏற்கனவே தொற்றுடன் இனங்காணப்பட்டவர்களுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள்.

தெல்லிப்பழை மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்கள் தொற்றுடன் இனங்காணப்பட்டவருடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள்.

கோப்பாய் மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் இலங்கை போக்குவரத்துச் சபை கோப்பாய் சாலையில் பணியாற்றுபவர்.

சண்டிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் சுயதனிமைப்படுத்தப்பட்டிருந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## தேவாலயத்தில்...

னொருவர் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கிறிஸ்தவர்களின் முக்கிய வழிபாட்டு வாரமாக இந்த வாரம் காணப்படும் நிலையில் நேற்றுமுன்தினம் குறித்த ஆலயத்தில் இரவு வழிபாடு இடம்பெற்ற சமயத்தில் சந்தேகத்துக்கிடமான முறையில் இளைஞனொருவர் தேவாலயத்தினுள் சென்றுள்ளார்.

அங்கிருந்தவர்கள் அவரை விசாரித்த போது, அவர் கண்டி அக்குரணை பிரதேசத்தைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞன் எனத் தெரியவந்துள்ளது.

உடனடியாக அவரை அங்கிருந்தவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-110)

## மயங்கி...

ளார். சுமார் 65 வயது மதிக்கத்த முதியவர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அதேவேளை, நேற்று மாலை 4 மணியளவில் சாவகச்சேரி, சதொச விற்பனை நிலையத்துக்குப் பொருள்கள் வாங்கச் சென்றிருந்த முதியவர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். அவர் உடனடியாக சாவகச்சேரி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட போதும் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-159)

## மரியசேவியர்...

றத்தை நிறுவி ஏறத்தாழ ஒரு அரை நூற்றாண்டுகளுக்கு மேலாக ஈழத் தமிழ் கலை, இலக்கியம் பரப்பில் கோலோச்சி வந்தவர் நீ.மரியசேவியர் அடிகள். இவர் நாடக பயிற்சிப் பாசறைகள், நூல் வெளியீடுகள், கருத்தரங்குகள், ஓவிய, சிற்ப கண்காட்சிகள் மற்றும் சஞ்சிகை வெளியீடு என்று ஒரு பன்முக செயற்பாடுகளை அர்ப்பணிப்புடன் செயற்படுத்தி வந்தார்.

1939ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் இளவாலையில் பிறந்த மரியசேவியர் அடிகளார் 1966 ஆம் ஆண்டு 'திருமறைக் கலாமன்றம்' என்ற அமைப்பை நிறுவினார். காட்டிக்கொடுத்தவன், பலிக்களம், நல்லதங்காள், நெஞ்சக்கனல், நீ ஒரு பாதை, யூதகுமாரி முதலான பல நாடகங்களை உள்ளூரிலும் ஐரோப்பிய தேசங்களிலும் மேடையேற்றினார்.

இந்த அமைப்பினூடாக 1990 ஆம் ஆண்டு 'கலைமுகம்' என்னும் காலாண்டுக் கலை இலக்கிய இதழை ஆரம்பித்து அதன் ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் சிறிது காலம் பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். இவருக்கு; இவரது சமய, கலைப் பணிகளைப் பாராட்டி 1997 ஆம் ஆண்டு ஜேர்மனியின் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தில் அருட்தந்தை ஜெயசேகரம் அடிகளார் பொன்னாடை அணிவித்துக் 'கலைத்தூது' என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். இவரின் கலைச் சேவையைப் பாராட்டி யாழ். பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கி கௌரவித்தது.

தமிழ் மக்களின் விடிவுக்காக நீண்ட காலமாக குரல் கொடுத்து வந்த முன்னாள் மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை காலமான அதே நாளில் , (கிறிஸ்தவ மக்களின் புனித நாளான பெரிய வெள்ளிக்கு முதல் நாளான நேற்று) மற்றொரு தமிழ் கலை இலக்கிய உலக ஆளுமையான நீ.மரியசேவியர் அடிகளாரும் உயிரிழந்துள்ளமை மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. (எ-26)

## கட்டுப்பாடுகளைக்...

கட்டுப்பாடுகள் மீறப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போதுள்ள தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு பொது நிகழ்வுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மிக அத்தியாவசியம் என்றால் மட்டும் 50 பேர்களுடன் கூட்டம் நடத்த முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாடுகளை மீறி அதிகமானோருடன் திருமணம் நடத்தப்பட்டது என்று நெல்லியடியில் ஒரு திருமண மண்டபத்துக்கு சுகாதாரப் பிரிவினர் நேற்று "சீல்" வைத்துள்ளனர்.

இந்தநிலையில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் 239 பேர் கூட்டப்பட்டு அவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கும் நிகழ்வு நேற்று மாலை 3 மணியளவில் நடத்தப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு இரண்டாம், மூன்றாம் கட்டமாக பட்டதாரிப் பயிலுநர்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு, அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்த நியமனம் வழங்கும் நிகழ்வே நடைபெற்றுள்ளது. இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் க.மகேசன் கலந்துகொண்டு நியமனக் கடிதங்களை வழங்கியுள்ளார்.

கொரோனாத் தொற்று நிலைமையால் பொதுமக்களுக்குப் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றால் பல்வேறு இடர்பாடுகளை மக்கள் சந்திக்கின்றனர். அவர்களுக்குரிய நிவாரணங்கள் கூட அதிகாரிகள் சிலரின் நடவடிக்கையால் கிடைக்காதுள்ளது.

சாதாரண மக்களுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரிகள், அந்தக் கட்டுப்பாடுகளை அரச அதிகாரிகள் கடைப்பிடிப்பதில்லை என்று மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். அதிகாரிகள் இவ்வாறு நடப்பதானால் மக்களுக்கு மட்டும் ஏன் கட்டுப்பாடுகள்?, எதற்காக கொரோனாவை ஒழிக்க மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறார்கள்? என்று மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். (எ-ஒ5)

## ஒரு லட்சம்...

ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி.ஜயசுந்தரவுக்கு, ஜனாதிபதியால் இந்தப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்களின் கலந்துரையாடல் நடைபெற்றது. அதிலேயே ஜனாதிபதி இந்தப் பணிப்புரையை விடுத்தார் என்று அவரது ஊடகப் பிரிவு தெரிவிதத்துள்ளது.

வடக்கு மருத்துவமனைகளில் சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றியோருக்கு நிரந்தர நியமனம் வழங்க வடக்கு மாகாண சபை முன்னர் நடவடிக்கை எடுத்திருந்தது. எனினும் அது பின்னர் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

அதில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனக் கடிதங்கள் கிடைத்திருந்த நிலையில், 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நிதி அமைச்சின் செயலாளரின் பணிப்பில் அனைத்துப் புதிய நியமனங்களும் இடைநிறுத்தப்பட்டன.

தமக்கான நிரந்தர நியமனத்தை இடைநிறுத்தியமை தங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி என்று தெரிவித்து பாதிக்கப்பட்ட சுகாதாரத் தொண்டர்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தநிலையிலேயே, ஜனாதிபதியால் மேற்கண்ட பணிப்புரை விடுக்கப்படடுள்ளது. (எ-இ)

## யாழ்.போதனா...

வாலேயே அவர் உயிரிழந்துள்ளார் என்று பெண்ணின் கணவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாதகலைச் சேர்ந்த அன்ரன் ஜோர்ஜ் தாட்சாயினி (வயது-38) என்ற பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். 3 பிள்ளைகளின் தாயான அவர் கடந்த 30 ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று தெரியவருகின்றது. சத்திரசிகிச்சை ஒன்றுக்காகச் சேர்க்கப்பட்ட இவருக்கு கடந்த 31ஆம் திகதி சத்திரசிகிச்சை நடைபெற்றுள்ளது. விடுதியில் சேர்க்கப்பட்டிருந்த இவர் திடீரென உயிரிழந்துள்ளார்.

மருத்துவர்களின் கவனக்குறைவாலேயே தனது மனைவி உயிரிழந்துள்ளார் என்று பெண்ணின் கணவர் குற்றஞ்சாட்டியுள்ளார். சந்திரசிகிச்சையின் பின்னர் வழங்கப்படும் உணவு தொடர்பில் மருத்துவர்கள் சரியான வழிகாட்டல்களை வழங்கவில்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மருத்துவமனை தரப்புகளைத் தொடர்புகொண்டு கேட்டபோது, "பெண் ஒருவர் இவ்வாறு திடீரென உயிரிழந்தமை உண்மைதான். ஆயினும் அவரது இறப்புக்கான காரணம் உடற்கூற்றுப் பரிசோதனையிலேயே தெரியவரும்" என்று தெரிவிக்கப்பட்டது. (எ-26)

## மனைவியைக்....

இந்தத் தம்பதிக்கு 16 வயதில் ஒரு மகளும், 13 மற்றும் 6 வயதில் இரு மகன்களும் உள்ளனர். குடும்பத் தகராறில் கணவன் மனைவியின் கழுத்தை நெரித்துக் கொன்றிருக்கலாம் என்றும், அதன்பின்னர் தூக்கிட்டு இறந்திருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-10,214,113,12,ரி1)

## கொரோனா...

னர்.

அதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 571 ஆக அதிகரித்துள்ளது. (எ-இ)

## மன்னார்...

இறைபதமடைந்தார்.

அவரின் இறுதித் திருப்பலி எதிர்வரும் திங்கட்கிழமை மாலை மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இடம்பெறவுள்ளது. ஆயருடைய திருவுடல் யாழ்ப்பாணம் ஆயர் இல்ல சிற்றாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இன்று காலை 11 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மதியம் மன்னாருக்கு உடல் எடுத்துச் செல்லப் படவுள்ளது.

1940ஆம் ஆண்டு ஏப்ரல் 16ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் பிறந்த அவர், தனது 27ஆவது வயதில் அருட்பணியை ஆரம்பித்தார். 1992 ஆம் ஆண்டு ஜூலை 6ஆம் திகதி மன்னார் மறைமாவட்டத்தில் இரண்டாவது ஆயராக நியமிக்கப்பட்டார். மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகை 2015ஆம் ஆண்டு ஏப்ரல் தொடக்கம் கடுமையான நோயால் பாதிக்கப்பட்டார். அதனால் அவர், ஆயர் பணியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தார்.

தமிழ்த் தேசிய உணர்வாளரான அவர், போராட்டத்துக்கும் பலவழிகளில் துணை நின்றார். இறுதிப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்று கடுமையாகப் பாடுபட்டார்.

2009ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரின் பின்னர் ஒரு லட்சத்து 46 ஆயிரம் பேர் காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்ற உண்மையை ஆதாரங்களுடன் முதன் முதலில் எடுத்துக் கூறியவர் இராயப்பு ஜோசப் ஆண்டகை என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ.க.56,60,20,26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சர்ச்சைக்குரிய தே.எண்ணெய் விவகாரம்

# பாம் ஒயில் வர்த்தகர்களால் புற்றுநோய் விமர்சனங்கள்!

சொல்கிறார் விமல்



**கொழும்பு, ஏப். 2**

**தேங்காய் எண்ணெயில் புற்றுநோயை ஏற்படுத்தும் மூலக்கூறுகள் உள்ளன என்று வெளியாகியுள்ள விமர்சனங்களின் பின்னணியில், பாம் ஒயில் வர்த்தகர்கள் உள்ளனர் என்று கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது,

புற்றுநோயை ஏற்படுத்தும் தேங்காய் எண்ணெய்க்கு முன்னர், புற்றுநோயை ஏற்படுத்தும் பாம் ஒயிலே சந்தையில் இருந்தது. மரக்கறி எண்ணெய் என நாம் உண்பது புற்றுநோயைத் தான். அந்த எண்ணெயில் எவ்வித மரக்கறிகளும் இல்லை.

கடந்த காலத்தில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி எமது நாட்டில் வீழ்ச்சி கண்டது. அதற்கான மூலப் பொருள்களை உற்பத்தி செய்வது கனவாக மாறியது. அதனால் தேங்காய் எண்ணெய் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மூடப்பட்டன.

அதனால் வெளிநாடுகளில் இருந்து பல்வேறு எண்ணெய்களை இறக்குமதி செய்து, எமது பிள்ளைகளுக்கு ஊட்டினோம். இன்று அவர்களை நோயாளிகளாக மாற்றியுள்ளோம். பாம் ஒயிலுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தடையின் காரணமாகவே, புற்றுநோயை ஏற்படுத்தும் தேங்காய் எண்ணெய் குறித்து விமர்சிக்கின்றனர் என்றார். (க-இ)

## வகுப்பறைகள் மூடப்பட்டன

கொழும்பு, ஏப். 2

கொழும்பு ஆனந்தா கல்லூரி ஆசிரியர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, அந்தக் கல்லூரியின் தரம் 7 மற்றும் 8 ஆகிய வகுப்பறைகள் மூடப்பட்டுள்ளன. 70 மாண வர்கள் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். (ஒ.இ)

**புதிய வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கொழும்புத்துறையில் 3 அறைகளுடன் கூடிய புதிய வீடு விற்பனைக்கு.

தொடர்பு: 077 444 9119

**கார் தேவை**

SUZUKI CELERIO

வகை கார் தேவை

075 511 6767

**காணி விற்பனைக்கு**

யாழ். கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் 2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

(நிலப்பரப்பு)

(தரகர் தேவையில்லை)

077 814 7389

## மின்தடை

யாழ்ப்பாணம், ஏப். 2

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை மின்சாரம் தடைப்படவுள்ள பகுதிகள் தொடர்பில் மின்சாரசபை அறிவித்துள்ளது.

**யாழ். பிரதேசத்தில்** விமான நிலைய சந்தி பலாலி, மயிலிட்டி பம்ப் ஹவுஸ், மயிலிட்டி வி.சி. டச்சு வீதி, பலாலி, சாந்தை சந்தி, தையிட்டி, தையிட்டி சந்தி, வள்ளுவர்புலம் மயிலிட்டி, வசாவிளான், பலாலி, விமானப்படை விமான நிலையம் பலாலி, பலாலி இராணுவ முகாம், மயிலிட்டி 515 படைப்பிரிவு இராணுவ முகாம், மயிலிட்டி இராணுவ முகாம், மயிலிட்டி மீன்பிடி துறைமுகம், பலாலி விமானப்படை தங்கு விடுதி ஆகிய இடங்களிலும்,

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கொக்காவில் ரூபவாகினி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## வர்த்தக அமைச்சர் பதவி விலக வேண்டும்

ஐ.ம.ச. போர்க்கொடி

கொழும்பு,ஏப்.2

புற்று நோயை ஏற்படுத்தக் கூடிய மூலக்கூறுகள் அடங்கிய தேங்காய் எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டமைக்காக, வர்த்தகத்துறை அமைச்சர் பதவி விலக வேண்டிய நிலைமை நிச்சயம் ஏற்படும். அவ்வாறில்லை என்றால் அதனை வலியுறுத்தி மக்களின் சார்பில் நாம் குரல் கொடுப்போம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

இலங்கையில் உற்பத்தி செய்யப்படுகின்ற தேங்காய் எண்ணெய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. வெளிநாட்டவர்களுக்கு ஆரோக்கியமான எண்ணெய்யை வழங்குவதற்கு முன்னர் நாட்டுப் பிரஜைகளுக்கு அவற்றை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம் - என்றார். (க-இ)

## போதைப்பொருள்களுடன் சந்தேகநபர்கள் ஐவர் கைது

கொழும்பு,ஏப்.2

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்புக்களில் ஹெரோயின் மற்றும் கஞ்சாவுடன் சந்தேக நபர்கள் ஐவர் கைது செய்யப்பட்டனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

முகத்துவாரம் பிரதேசத்தில் 9 கிராம் ஹெரோயினுடன் சந்தேகநபர்கள் இருவரும், கஸ்கிஸை பட்டோவிட்டப் பிரதேசத்தில் 4 கிராம் ஹெரோய்னுடன் பெண்ணொருவரும், தொம்பே பிரதேசத்தில் 10 கிராம் ஹெரோய்னுடன் சந்தேகநபரொருவரும் கைதுசெய்யப்பட்டனர். (க-இ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 . 01 . 1939

மறைவு 31 . 03 . 2021



**மரியாம்பிள்ளை அலோசியஸ் ஞானப்பிரகாசம்**

(முன்னாள் தொழில்நுட்ப உதவியாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்)

யாழ்ப்பாணம் மார்டீன் வீதியைப் பிறப்பிடமாகவும் இல 106B ஜெயந்திநகர் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை அலோசியஸ் ஞானப்பிரகாசம் (முன்னாள் தொழில்நுட்ப உதவியாளர், பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம்) அவர்கள் 31.03.2021 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை அலோசியஸ் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை திரேசம்மா தம்பதியரின் மருமகனும் அமிர்தநாயகி சுசீலா அவர்களின் அன்புக் கணவரும்,டொறிஸ் (பிறேமினி), ஜொய்சி சவுதாமினி (குடும்ப நல உத்தியோகத்தர், பிரதேச வைத்தியசாலை, உருத்திரபுரம்), அன்ரன் ராஜேந்திரா (சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கிளிநொச்சி), குகேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேஸ்குமார் (நீர்ப்பாசனத் திணைக்களம் கிளிநொச்சி ), செல்வரட்ணம் (சுகாதார திணைக்களம் கிளிநொச்சி), கலாவதி, குலக்கோதை (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், எழிலன்(கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவன்), பவிசாளினி, தர்சிகா (கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி மாணவிகள்) சஸ்மிகா, தரங்கினி, கவின் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும், மேரிதிரேசா, காலஞ்சென்ற மேரி அக்னஸ், அருட்பிரகாசம், வில்லிமார்கிரட், காலஞ்சென்ற அன்ரனி, அரியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தம்பிரட்ணம், பெர்னதேற் இராசாத்தி, யோசேப் இராசாத்தி, கிறேஸ் லீலா, ஜெயராசா, தனம் மற்றும் கிறிஸ்து யோகராசா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (02.04.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஜெயந்திநகர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக ஆனந்தநகர் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

077 288 2142

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இ... திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 அ... இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02. 04.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.